29th
April
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 28 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## உடல் உணரும் வெப்பம் இன்று

### திணைக்களம் எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் இன்று (29) பல பகுதிகளில் வெப்பநிலை அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்திற்கு அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, சப்ரகமுவ, கிழக்கு, மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை

02ம் பக்கம்பார்க்க...

# கோட்டாவுக்கு தடை இருந்தாலும் ஹஜ் ஏற்பாடுகளை முன்னெடுக்கலாம்

## நீதியரசர் சமரக்கோன் தெரிவிப்பு!

### மூன்று வழக்குகள் இன்று பரிசீலனை!!



இவ் ஆண்டு ஹஜ்ஜ/க்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஹஜ் கோட்டாவுக்கு தடை விதித்திருப்பது தடையாக அமையாது என மேல் நீதிமன்ற நீதியரசர் சமரக்கோன் வெள்ளியன்று தெரிவித்துள்ளார். யுனென்டட் ரவல்ஸ் ஹஜ் கோட்டா பகிர்ந்தளிப்பது தொடர்பாக தமது நிலையத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற அநீதியை எதிர்த்து தாக்கல் செய்த வழக்கில் விசாரித்த மேல் நீதீமன்ற நீதியரசர் நீதிமன்ற முஸ்லீம் சமய கலாச்சாரத் திணைக்களத்தினால், பகிர்ந்தளிக்கும் சமயத்தில் திணைக்களம் பகிர்ந்தளித்த 3500 கோட்டாக்களுக்கு தடை விதித்து வந்த தீர்மானம் தொடர்பாக விளக்கமளித்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் படி சட்டமா அதிபர் திணைக்களம் இது தொடர்பாக ஒரு வழக்கை தாக்கல் செய்து ஹஜ்

02ம் பக்கம்பார்க்க...

# கொழும்பு நகரில் 13 மே தின கூட்டங்கள்; பாதுகாப்புக்கு 4000 பொலிஸார்

உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்கள் புதனன்று மே தினத்தை கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றனர்.

02ம் பக்கம்பார்க்க...

Apax Campus
APAX CAMPUS
பட்டமளிப்பு விழா - 2024
On Monday 29th of April 2024 at 02.00 PM in BMICH Main Hall




| PhD | Master | Bachelor | HND | Diploma |
|---|---|---|---|---|
| Education | Education | Education | IT | IT |
| Management | Management | Science | English | English |
| Psychology | Arts | Arts | Tourism & Hospitality Management | Digital Marketing |
| HRM | Sociology | Business Management | Food & Beverage | Computer Hardware Technician |
| | Journalism | HRM | Digital Marketing | Tourism |
| | Social Work | IT | Project Management | Early Childhood Education |
| | Science | Journalism | Accountancy | Teacher Training |
| | Business Administration | Business Administration | Business Administration | Caregiver |

Head Office:
Apax Campus, No. 32, Dr. E.A. Cooray Mawatha, Wellawatte, Colombo-06

Branches
Anuradhapura | Kandy | Jaffna | Galle | Puttalam

Website www.apaxcampus.com
E-mail info@apaxcampus.com
011 49 66 899 | 077 44 59 859 | 077 06 20 485

# உலகெங்கும் வலுவடையும் பலஸ்தீன் அலை

## யுத்த நிறுத்தத்துக்கு தயாராகும் இஸ்ரேல்

## மௌனம் காக்கும் ஹமாஸ் தரப்பு



200 நாட்களையும் தாண்டி காசா மீது இஸ்ரேல் முன்னெடுத்து வரும் இன அழிப்பு போர் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது.

இன அழிப்பில் ஈடுபடும் இஸ்ரேல் இனி அழிப்பு செய்வதற்கு உதவிசெய்யும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முழு உலகிலும் பலஸ்தீனுக்கு சார்பாக எழுந்துள்ள ஆதரவு அலைக்கு அச்சப்படவும், சிந்திக்கவும் ஆரம்பித்துள்ளன.

சர்வதேச இராணுவ, பாதுகாப்பு தரப்புகளின் தகவல்களின்படி இஸ்ரேலிய மொசாட் எதிர்பார்க்காத அளவு அமெரிக்கா உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் காசாவுக்கு சார்பாக களம் குதித்துள்ளமை இஸ்ரேலில் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காசா போரில் இலக்குகளை அடையாமை, ஹமாஸ் பிடித்துச் சென்றவர்களை மீட்காமை, பொருளாதார வீழ்ச்சி, சர்வதேசத்தின்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

# ஹிஜாப் உடை மூலம் இஸ்லாம் பெண்களின் மரியாதையினையும் கண்ணியத்தினையும் பாதுகாக்கின்றது

## - ஈரான் ஜனாதிபதியின் பாரியார் ஜெமிலியா ஆலமுல்ஹுதா -



கண்ணியம், அறநெறிகள் மற்றும் நெறிமுறைகள் ஓர் மத பின்னணியுடன் ஓர் பண்புள்ள மனிதனை உருவாக்குகிறது. குறிப்பாக ஹிஜாப் உடை மூலம் இஸ்லாம் பெண்களின் மரியாதையினையும் கண்ணியத்தினையும் பாதுகாக்கின்றது என ஈரான் ஜனாதிபதியின் பாரியார் ஜெமிலியா ஆலமுல்/ஹுதா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஈரான் தூ தரகத்தின் கலாச்சார மத்திய நிலையத்தில் தனது ஒழுக்க விழுமியங்களால் வாழ்க்கையில் வெற்றி பெற்ற இடம்பெற்ற ஓர் சாதாரண ஈரானிய பாரம்பரிய பெண்ணுடனான உரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

கல்வியின் முக்கியத்துவம் அத்தோடு கல்வி எவ்வாறு மனிதனின் ஆன்மீக விருத்தி மற்றும் பகுத்தறிவினை மேம்படுத்துகின்றது என்பதனை வலியுறுத்திக் காட்டினார்.

அத்தோடு ஒரு குடும்ப முன்னேற்றத்திற்கு தாய் எப்படி முக்கியமானவர் என்பதை விவரித்தார். ஈரானிய மாதிரி தாய் எவ்வாறு மேற்கத்திய மதிப்பீட்டிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதனை தெளிவுபடுத்திக் காட்டினார்.

இலங்கையைப் போலவே, குடும்பத்தில் தாயின் குணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும் அனைத்து ஒழுக்க நெறிகளுக்கும் ஒப்பற்ற பங்கு வகிக்கின்றது அதாதோடு ஓர் தாய் குழந்தைகளை எப்படி கவனித்து வாழ்க்கையில் வெற்றி பெற வைக்கிறாள் என்பதை விளக்கினார்.

குறிப்பாக, இஸ்லாமிய சமுதாயத்தில், இஸ்லாம் பெண்களை ஹிஜாப் மற்றும் மரியாதையான உடையுடன் ஏன் பாதுகாக்கிறது மற்றும் மதத்திலிருந்து அவள் எவ்வாறு பாதுகாக்கிறாள் என்பதை விளக்கினார்.

அத்தோடு, இஸ்லாம் அவளை ஒரு மரியாதையான மற்றும் பொறுப்பான பெண்ணாக குடும்பத்திலும் சமூகத்திலும் உயர்ந்த நிலையை அடைய அனுமதிக்கின்றது. இது இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் அதிக நன்மைகளுடன் ஒரு தாயைப் பராமரிப்பதாகும் என தெரிவித்தார். நவீன சமுதாயத்தில் ஈரான் எவ்வாறு நல்ல நடத்தை மற்றும் மரியாதையான உடையுடன் முன்வருகிறது என்பதை அவர் விளக்கினார். ஈரானியப் பெண், மதப் பின்னணியுடன் உலகில் இன்று உயர்ந்த நிலையை அடைந்திருப்பதாக அவர் கூறினார்.

---

### கொழும்பு....

(முன் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கடந்த வருடங்களை இம்முறை மே தினம் களை கட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் அண்மித்துள்ள நிலையில் பிரதான அரசியல் கட்சிகள் தமது பலத்தை நிரூபிப்பதற்கான ஒரு களமாக இம்முறை மே தினத்தை மிகவும் கோலாகலமாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். கொழும்பில் இம்முறை 13 மே தின கூட்டங்கள் நடைபெறவுள்ளன.இதில் ஆறு பிரதான கூட்டங்களே முக்கியத்துவம் பெறவுள்ளன.ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி,மொட்டுக் கட்சி,சிரீலங்கா சுதந்திர கட்சி ஆகியன பாரியளவிலான பேரணிகளை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளன. இதேவேளை இம்முறை கூட்டங்களின் போது கட்சித் தாவல்கள் இடம்பெறலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் மே தின பாதுகாப்பு பணிகளுக்காக 4000 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

### உலகெங்கும்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவில் பின்னடைவு என தொடர் அடிகளை எதிர்கொண்ட இஸ்ரேலுக்கு பல்கலைக்கழகங்களில் நிகழ்ந்து வரும் ஆர்ப்பாட்டங்கள் சர்வதேச ரீதியில் மிகப்பெரும் பாதக நிலையை ஏற்படுத்திள்ளது.

நெதர்லாந்தில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தனக்கு எதிராக எந்நேரமும், கைது உத்தரவை பிறப்பிக்கலாம் என இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு அச்சமுற்றிருக்கையில், அவருக்கு பல்கலைக்கழக மாணவர் போராட்டம் மற்றுமொரு புதுத் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், அந்தகையில் தொடர் தோல்விகளை அடுத்து இஸ்ரேல் தரப்பு தற்போது புது போர்நிறுத்த ஒப்பந்தம் பற்றிய தரவுகளை ஹமாஸூக்கு அனுப்பி வைத்துள்ளது. எனினும் இந்நத ஆக்கம் எழுதப்படும் வரை ஹமாஸிடமிருந்து அதுபற்றிய எந்த விளக்கமும் வெளியாகவில்லை.

### உடல்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களிலும் சில இடங்களில் மனித உடலால் உணரப்படும் அளவிற்கு வெப்பம் அதிகரிக்கக்கூடும்.

இதன்போது போதிய அளவு நீர் அருந்துதல், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுத்தல், வெட்ட வெளியில் நடமாடுவதைக் கட்டுப்படுத்துதல் போன்ற சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

### கோட்டாவுக்கு....

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு எடுத்த தீர்மானம் தடையாக இருப்பதாக தெரிவித்திருக்கின்றார்.

மேலும் இது தொடர்பாக விசாரித்த பின்பே இந்த முடிவை அறிவித்திருக்கிறனர்.

இதே நேரம் 3500 கோட்டாக்களை தடை விதித்த இந்த தீர்மானத்தை ஆட்சேபித்து முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்ற வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு வருவதாக முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களத்தின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இன்று ஹஜ் தொடர்பாக நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் பரிசீலிக்கப்படவுள்ளன.

உயர்நீதிமன்றத்தில் முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் தாக்கல் செய்த வழக்கும், அதே நேரம் மேல் நீதிமன்றம் விசாரணை செய்திருக்கின்ற வழக்கு, சட்டமா அதிபர் தாக்கல் செய்திருக்கின்ற வழக்கு ஆகியவை யாவும் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற ஈரான் ஆதரவாளர்கள்



கடந்த புதனன்று இலங்கைக்கு ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஈரான் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரல் ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில் வெளிவிவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஈரானுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்களுக்கு ஈரான் ஜனாதிபதியை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

40 வருடங்களுக்கு மேலாக புத்தளத்தில் இயங்கி வரும் முன்னாள் இயக்கமொன்று ஈரான் ஜனாதிபதியை சந்திக்க கொழும்பு வந்து ஜனாதிபதி தங்கியிருந்த ஹில்டன் ஹோட்டல் வரை சென்றுள்ளனர்.

அவர்கள் ஈரான் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக நினைவுப் படிவத்துடன் வருகை தந்திருந்த போதிலும் அவர்களுக்கு சந்திப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இக் குழுவினர் வருகை தந்ததிருந்தனர்.

பாதுகாப்பு கெடுபிடிகள் காரணமாக ஹில்டன் ஹோட்டலுக்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரைஸியின் விருப்பத்திற்குரிய உணவாக இடியப்ப புரியாணி

ஜனாதிபதிக்கும் தூதுக்குழுவினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதனன்று இரவு ஜனாபதி மாளிகையில் விருந்துபசாரம் ஒன்றை நடாத்தினார்.

இந்த விருந்துபசாரத்தின் போது வழங்கப்பட்ட உணவுகளில் இடியப்ப புரியாணி ஈரான் ஜனாதிபதியின் விருப்பத்திற்குரிய உணவாக அமைந்திருந்தது.

இது பற்றி விபரம் கேட்டபோது ரணில் விக்கிரமசிங்க இந்த இடியப்ப புரியாணி தயாரித்த சமையலாளிகளுக்கு ஈரான் ஜனாதிபதியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இது இலங்கையில் மிக முக்கியமாகவுள்ள உணவு வகையென்று ரணில் ஈரான் ஜனாதிபதிக்கும் இப்ராஹிம் ரைசிக்கு கூறியுள்ளார்.

# ஆளுநர் ஆகிறார் நஸீர் அஹமட்



வடமேல் மாகாண ஆளுனராக நஸீர் அஹமட் நியமிக்கப்படவுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுனராக பணியாற்றிய லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தென் மாகாண ஆளுனராக நியமிக்கப்படவுள்ளார்.

இதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கே நஸீர் அஹமட் நியமிக்கப்படவுள்ளார்.

முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழக்கொன்றினால் இழந்த பின் அமைச்சர் பதவியையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 APRIL 29 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## ஹஜ்ஜில் ஏற்படும் நெருக்கடிக்கு

# ஹஜ் சட்டமே தேவை

இலங்கையின் ஹஜ் விவாகரம் மீண்டும் நீதிமன்றம் வரை சென்றுள்ளது. ஹஜ் கோட்டாப் பகிர்வில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு முகவர் நிலையமொன்று தாக்கல் செய்த வழக்குத் தொடர்பாக தீர்ப்பு ஒன்றை வழங்கிய மேல்நீதிமன்றம் முஸ்லீம் சமய, கலாசாரத் திணைக்களம் பகிர்ந்தளித்த கோட்டாவினை ரத்து செய்தது. இதனால் ஹஜ் யாத்திரைகளுக்கு தமது பயணம் பற்றிய நிச்சயமற்ற தன்மை ஒன்று ஏற்பட்டுள்ளது. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஹஜ் யாத்திரியை பாதிக்காத போதும் ஹஜ் ஏற்பாடு சவுதி அரேபியாவுடன் இணைந்து மேற்கொள்வதனால் ஹஜ் ஏற்பாடுகள் தாமதத்தையும் இழுபறியையும் ஏற்படுத்தப் போகின்றது என்பது தவிர்க்க முடியாது.

ஹஜ் தொடர்பாக அடிக்கடி முகவர்கள் நீதிமன்றத்தை நாடி வருவது இடம்பெற்றே வருகின்றது. திங்கட்கிழமையன்று ஹஜ் விவகாரம் தொடர்பாக உயர்நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றங்களில் மூன்று வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. ஹஜ் ஏற்பாடு தொடர்பாக தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள் தொடர்பாக அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பாகவும் ஒரு விசாரணை இடம்பெறவுள்ளது. இது தொடர்பாக சில கருத்துக்களை தெரிவித்த முகவர் நிலையங்கள் மற்றும் ஹஜ்குழு உறுப்பினர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகுமாறு உத்தரவு இடப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பை முகவர்கள் ஏற்கத் தேவையில்லை எனக் கூறும் குரல்கள் வெளிவந்த நிலையில் அந்தக் குரல்கள் நீதிமன்றத்தை அவமதிப்பதாகவும் ஹஜ்குழு உறுப்பினர்கள் திங்கட்கிழமை நீதிமன்றத்திற்கு ஆயராகுமாறு உறுப்பினர்களை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை நீதிமன்றம் எப்படி பார்க்கப் போகுது என்பது அடுத்த சில தினங்களில் தெரியப் போகின்றது. ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டல்களின் அடிப்படையில் ஹஜ் அரசாங்க ஹஜ்குழு கோட்டாக்களை பகிர்ந்திருந்தால் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. எனினும் ஹஜ்முகவர் நிலையங்கள் தவறிழைக்கும் போது அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றது.

ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டல்களின் அடிப்படையில் கோட்டாக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் பிரச்சினைகள் உருவாகியிருக்காது. அரசாங்க ஹஜ்குழு இந்த விடயத்தில் நீதிமன்ற வழிகாட்டல்களை பின்பற்றியிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் எதிர்நோக்க வேண்டியதில்லை.ஹஜ் தொடர்பான வலுவான சட்டங்கள் இல்லாமையே இந்த சிக்கல்களுக்கு பிரதான காரணமாகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

ஹஜ் தொடர்பாக சட்டமொன்று நிறைவேற்றுவது பற்றி நீண்டகாலமாக பேசப்பட்டு வந்த போதும் இதுவரை அவ்வாறான சட்டமொன்று ஆக்கப்படவில்லை.

இது குறித்து சமய விவகார அமைச்சும், முஸ்லீம் சமூகத் தலைமைகளும் அக்கறை காட்டினால் வருடா வருடம் இடம்பெற்று வரும் பிரச்சினைகளை தவிர்க்கலாம். ஹஜ் தொடர்பாக சட்டமொன்று இல்லாமையே இந்த சிக்கல்களுக்கு பிரதான காரணமாகும். இது குறித்து சமய விவகார அமைச்சும், முஸ்லீம் சமூகத் தலைமைகளும் அக்கறை காட்டினால் வருடாவருடம் வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். வருடாவருடம் ஹஜ் விவாகரத்தில் நீதிமன்றத்தை நாடுவது ஆரோக்கியமானதல்ல. முஸ்லீம் சமூகத்தை புனிதமான கடைமையைச் செய்வதற்கு சண்டை பிடிக்கின்றார்கள் என ஏனைய சமூகத்தவர்கள் பார்க்க இடமுண்டு. இந்த விடயத்தில் முஸ்லீம் சமூகத் தலைமைகள் பொறுப்புடன் செயற்பட்டு ஒற்றுமையை வலியுறுத்தும் ஹஜ்ஜில் சர்ச்சைகள் ஏற்பட இடமளிக்கக்கூடாது என்பதில் ஹஜ்ஜில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஹஜ் சட்டம் அவசியமாகும்.

# அமைச்சர் அலி சப்ரி முயற்சியில் களுத்துறையிலுள்ள இரு பாடசாலைகளுக்கு மூன்று மாடிக் கட்டிடங்கள்







(பீ.எம். முக்தார், பேருவளை)

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினது வெண்டுகோளின் பேரில் மேல் மாகாண ஆளுநர் எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக களுத்துறை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம் மற்றும் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி ஆகியவற்றிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேட்கொண்டு பாடசாலைகளின் நீண்ட கால தேவைகளையும், குறைபாடுகளையும் கண்டறிந்தனர்.

இதில் உயர்தர கல்வி நடவடிக்கைகளுக்கான வசதிகளைப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையும் பாடசாலை சமூகத்தினரால் முன்வைக்கப்பட்டது. அப்போது மேல் மாகாண ஆளுநரினால் இரண்டு பாடசாலைகளுக்கும் சுமார் 50 மில்லியன் ரூபா வீதம் நிதி ஒதிக்கித் தருவதாக வாக்குறுதியளித்ததோடு பாடசாலைகளின் வளங்களையும் மேற்பார்வை செய்தார்.

அதன் படி களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு விஞ்ஞான ஆய்வு கூடத்துடனான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றும் களுத்துறை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்திற்கு கேட்போர் கூடத்துடனான மூன்று மாடிக் கட்டிம் ஒன்றும் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

நிகழ்வுகளில் மேல் மாகாண கல்வி அமைச்சின் மேலதிகப்ப பணிப்பளார் திரு மஹிந்த விஜேயதுங்க, மேல்மாகாண திட்டமிடல் பணிப்பளார் திரு லக்மால், களுத்துறை வலயக் கல்விப் பணிப்பளார் திரு விக்ரமராச்சி, கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு அபயநாயக, இலங்கை பெற்ரோலிய கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் உவைஸ் முஹம்மத், முன்னாள் நகர பிதா அமீர் நசீர், முன்னாள் நகர சபை உறுப்பினர் ஹிஷாம் சுஹைல், களுத்துறை மாநகர ஆணையாளர் திருமதி பியுமாலி, பாடசாலை அதிபர்களாக நப்ராஸ் நிலார் மற்றும் திருமதி சாஜிதா உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஈரான் ஜனாதிபதியை திட்டமிட்டே சதியால் சந்திக்காமல் தடுக்கப்பட்டார்

## முஜிபுர் ரஹ்மான் குற்றச் சாட்டு



வேண்டுகோளின் பிரகாரம் சஜித் பிரேமதாச ஈரான் ஜனாதிபதியை சந்திக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக பல தகவல்கள் வந்து கொண்டிருந்ததை நாம் அறிவோம் – இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (28) நடந்த ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான், ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவரை சந்திக்காமை தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளிவந்த கருத்துகளுக்கு பதிலளித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

இந்த பிரச்சாரங்களை முன்னெடுக்கும் கூட்டத்தினரை எங்களுக்கு தெரியும். ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்ததைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச அவர்கள் ஈரான் தூதுவருடன் பேசி சந்திப்பதற்கு நேரம் கேட்டார். எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல எதிர்க்கட்சித் தலைவரின் பாராளுமன்ற செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜயகுணவர்தன அவர்களும் ஈரான் தூதரத்தை தொடர்பு கொண்டு எதிர்க்கட்சித் தலைவருக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டார். ஈரான் ஜனாதிபதி நான்கரை மணித்தியாலம் அல்லது எந்த மணித்தியாலங்களே இங்கு இருக்கப் போகிறார், இதனால் இக்குறிப்பிட்ட நேரத்திற்கு பல வேலைகள் இருப்பதால் நேரம் தருவதற்கு முயற்சி செய்வதாக ஈரான் தூதுவர் தெரிவித்தார். ஆனால் இறுதி வரை நேரம் தரவில்லை.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் இராபோசனம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார். அன்று காலையிலையே ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வருகிறது இந்த இராபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு. அன்று இரவு நடக்கும் இராபோசனத்துக்கு அன்று காலை அதுவும் தொலைபேசி அழைப்பு மூலம் அங்கு வேலை செய்யும் ஒருவர் அழைப்பு விடுக்கிறார்.

அமைச்சே மேற்கொள்ளும். விருந்துபசாரங்களாக இருந்தாலும், பயணமாக இருந்தாலும், யாரை சந்திக்க வேண்டும் என்பதையெல்லாம் நிரல் படுத்துவது வெளிவிவகார அமைச்சே. இது தான் Protocol. ஆனால் ஈரான் ஜனாதிபதியின் விஜயத்தை வெளிவிவகார அமைச்சு ஒழுங்கு செய்யவில்லை. ஜனாதிபதி செயலாகத்தாலயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதனால் ஈரான் ஜனாதிபதியும் சஜித் பிரேமதாசவும் சந்திக்கக் கூடாது என ஜனாதிபதி செயலகத்திற்கு தேவை இருந்தது. இதனால் தான் திட்டமிட்டு சஜித் பிரேமதாச ஈரான் ஜனாதிபதியை சந்திக்க விடாமல் வேலை பார்த்தனர்.

அதனால் தான் அன்றைய இராப்போசன விருந்துக்கு அன்று காலையில் தொலைபேசி வாயிலாக அறிவிக்கின்றனர். இவ்வாறான சதித்திட்டங்களை போட்டனர்.

சஜித் பிரேமதாசவிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையேயுள்ள உறவை சீர்குலைக்கவே இதனால் திட்டம் போட்டனர். நான் ஒன்றை தெளிவாக கூற வேண்டும். கொரோனா காலத்தில் ஜனாசா விடயத்தில் கோட்டாபய ராஜபக்ச அவர்கள் எமது மையத்துகளை எரிக்க வேண்டும் என முடிவெடுத்த நேரத்தில், அடக்கக்கூடாது எரிக்க வேண்டும் என முடிவெடுத்த நேரத்தில், நாங்கள் எல்லோரும் சேர்ந்து முஸ்லிம்கள் எல்லோரும் சேர்ந்து பொரளை கனத்த மயானத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினோம். அந்த ஆர்ப்பட்டத்தில் எமது உரிமைகள் பாதுகாக்க சஜித் பிரேமதாச அவர்கள் எம்மோடு கலந்து கொண்டார்.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து இதைப் பற்றி கதைத்தார்கள். இதைப் பற்றி பேசினார்கள். இது அநியாயம் என்று கூறினார்கள். இந்த உரிமையை பாதுகாக்க வேண்டும் என பேசினார்கள்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி அன்று மௌனமாக இருந்தார்,கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்த விடயத்தில் ரணில் விக்ரமசிங்க மௌனமாக இருந்தார்.

கட்சித்தலைவர்கள் மௌனமாக இருந்தனர். அந்த உறவை சீர்குலைக்க பிரேமதாச அவர்கள் பாராளுமன்றத்தில், பலஸ்தீனத்தில் நடந்து வரும் கொடுமை, தாக்குதல்களுக்கு எதிராக தெளிவாக பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக போராடினார். அவர் பேசியிருக்கிறார்.

ஆனால் இந்த அரசாங்கம் பலஸ்தீன் விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகிறது. ஒருபுறம் பலஸ்தீனத்துக்காக பணம் சேகரிக்கின்றனர், மறுபுறம் இஸ்ரோலில் தூ தரகம் இருக்கத்தக்க ரணில் விக்ரமசிங்க வீசா வசதிகளை துரிதமாக வழங்க புதிய காரியாலயம் ஒன்றையும் திறக்கிறார். தூ தரகமும் இருக்கிறது. தூதரகத்திற்கு பதிலாக இஸ்ரேலில் இன்னுமொரு பிரதேசத்தில் புதிய காரியாலயம் ஒன்றை ஒரு மாத்ததிற்கு முன்னர் திருந்தார்.இலங்கைக்கு துரிதமாக வருகை தரும் பொருட்டு வீசா வழங்கவே இது திறக்கப்பட்டது.

பலஸ்தீனத்திற்கு பணமும் சேர்கிறார் அதேபோல இஸ்ரேலில் வேலை செய்ய தொழிலாளர்களை இங்கு இருந்து அனுப்புகின்றனர். இஸ்ரேலில் வேலை செய்ய இந்த ரணில்,ராஜபக்ச அரசாங்கம் இடம்கொடுத்துள்ளது. அது குறித்து பேசிகிறார்கள் இல்லை. இது குறித்து மௌனமாக இருக்கிறார்.

அதே போல தான் செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக தாக்குதல் நடத்துகிறார்கள். ஐரோப்பிய நாடுகள்,அமெரிக்க போன்ற நாடுகள் ஹூதி கிளர்ச்சியாளர்களை தாக்க கப்பல் அனுப்பியிருக்கிறார்கள்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி என்ன செய்தார்? அவரும் அமெரிக்காவுடன் சேர்ந்து ஹூதி கிளர்ச்சியாளர்களை தாக்க கப்பல் அனுப்பினார்.

இது எப்படி வெளிவந்தது ? அவர் செல்லவில்லை.

எங்களுக்கு உதவியாக இலங்கை அரசாங்கமும் கப்பல் அனுப்பி இருப்பதாக அமெரிக்கா தூதுவர் கூறினார்.

இந்த முஸ்லிம் மக்களை கவர இங்கு பணம் சேகரிக்கிறார். அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளை சந்தோசப்படுத்த ஹூதி அங்கத்தவர்களை தாக்க கப்பல் அனுப்புகிறார். இது தான் இவர்களுடைய இரட்டை வேடம். எனவே இந்த ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சம்பளம் எடுக்கக் கூடிய சில சமூக ஊடகங்களை நடத்தும், சிலர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைப் படி சஜித் பிரேமதாச மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கிடையே நிலவிவரும் சிறந்த உறவை பிரிப்பதற்கு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர்.இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினர் ஓமான் விஜயம்



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ் ஷைக் முஃப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி தலைமையில் ஒரு தூதுக்குழுவினர் கடந்த 21 ஆம் திகதி ஓமான் நாட்டுக்கான குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இக்குழுவில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உதவித் தலைவர்களில் ஒருவரான அஷ் ஷைக் ஏ. எல். எம். கலீல், ஆலிம்கள் விவகாரப் பிரிவின் செயலாளர் அஷ் ஷைக் எஸ். எல். எம். நவ்பர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஓமான் தலைமை முஃப்தி அஷ் ஷைக் அஹ்மத் பின் ஹமத் அல் கலீலி அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கைக்கான ஓமான் நாட்டுத் தூதுவர் அஹ்மத் பின் அலீ அல் ராஷ ிதி அவர்களின் சுமார் ஆறு மாதங்களின் அயராத முயற்சியின் பயனாக மேற்படி விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்விஜயத்தின் போது, ஓமான் சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் கலாநிதி முஹம்மது பின் சயீத் அல்-மஃமரி, காபூல் கலாச்சார மற்றும் அறிவியல் நிலையத்தின் பொதுச் செயலாளர் அஷ் ஷைக் ஹபீப் பின் முஹம்மத் அர் ரியாமீ, உதவித் தலைமை முஃப்தி கலாநிதி அஷ் ஷைக் கஹ்லான் பின் நப்ஹான் அல் கரூஸி, ஃபத்வாப் பிரிவின் பொதுச் செயலாளர் அஷ் ஷைக் அஹ்மத் பின் ஸுஊத் அல் ஸியாபி, முன்னாள் உயர்நீதிமன்றத் தலைவர் கலாநிதி அஷ் ஷைக் அப்துல்லாஹ் பின் ராஷித் அல் ஸியாபி ஆகியோரைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் அவர்களுடனான சந்திப்பு மிகவும் ஆரோக்கியமானதாக அமைந்தது.

எதிர்காலத்தில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் சமய, சமூக, கல்வி மேம்பாட்டு திட்டங்களுக்குத் தன்னாலான ஒத்துழைப்புகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

குறிப்பாக இரு நாடுகளுக்கு இடையே உள்ள இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக கருத்துப்பரிமாறப்பட்டதுடன், பரஸ்பர புரிந்துணர்வுத் திட்டங்களில் இரு தரப்பு அனுபவங்களை பரிமாறிக்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது.



# சவூதி பொருளாதாரத்துக்கு உந்துசக்தி தரும் உலகப் பொருளாதார மன்றம்!

உலகப் பொருளாதார மன்றத்தின் முதல் சிறப்புக் கூட்டத்தை சவூதி அரேபியா ரியாத் நகரில் நடத்த தீர்மானித்துள்ளது. இது இம்மாதம் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சர்வதேச ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் ஆற்றல் போன்ற பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட இருக்கின்றன.

இந் நிகழ்வானது சவூதி அரேபியா மற்றும் உலக பொருளாதார மன்றத்துக்கிடையே கைச்சாத்தான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் விளைவாக நடைபெறும் ஒன்றாகும்.

இந்த முக்கிய கூட்டத்தில், சர்வதேச நிறுவனங்கள், அரசு சார் துறைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிகத் துறையைச் சேர்ந்த சர்வதேச வல்லுநர்கள், கருத்துத் தெரிவிப்பவர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் உட்பட 1000க்கும் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர். தற்போதைய உலகளாவிய சவால்களைப் பற்றி இவ்வல்லுனர்கள் கலந்துரையாடி, உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துதவதையும், குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு நிலையான தீர்வுகளை காணும் நோக்கோடு சர்வதேச கூட்டு முயற்சிகள் மேற்கொள்வதையும் ஊக்குவிக்கவுள்ளனர்.

சவூதி அரேபியா மற்றும் ரியாத் நகரானது உலகப் பொருளாதாரம் தொடர்பான விடயங்களின் சிந்தனை, பொதுக் கருத்துக்களின் முன்னேற்றம் மற்றும் பொருளாதார விடயங்களுக்கு தலைமை வகித்தல் போன்ற விடயங்களுக்கான உலகளாவிய தலைநகரமாக மாறியுள்ளது.

ரியாத் நகரில் நடைபெறும் இந்த உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூட்டம் சர்வதேச ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் ஆற்றல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதோடு, இந்த நிகழ்வானது, உலகப் பொருளாதார மன்றம் மற்றும் உலகளாவிய பங்குதாரர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உதவும் ஒரு புதிய தளமாக இருக்கும்.

சவூதி அரேபியாவால் நடாத்தப்படும் இவ் உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூட்டம், மத்திய கிழக்கின் மிகப்பெரிய பொருளாதாரத் தலைநகரும், மூன்று கண்டங்களை இணைக்கக் கூடிய மைய நகரான ரியாத் நகரில் நடைபெற இருப்பதால், மேலும் பயனளிக்கக் கூடிய வகையில் இடம்பெறும்.






உலகெங்கிலும் உள்ள தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்களுக்கு தற்போதுள்ள சவால்களைப் பற்றி கலந்துறையாடவும், அனைவருக்கும் நேர்மறையான உலகளாவிய தாக்கங்களை உருவாக்க புதுமையான தீர்வுகளை முன்மொழியவும் இந்த சந்திப்பு ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் மற்றும் பிரதமர் முஹம்மத் பின் சல்மான் அவர்களது முயற்சியின் மூலம் இம்மன்றம் ரியாத் நகரில் நடைபெறுவதோடு, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்துக்குப் பிறகு முதல் முறையாக, உலகப் பொருளாதார மன்றமானது டாவோஸ் நகரிலிருந்து ரியாத் நகருக்கு இடமாற்றம் பெற்றிருக்கிறது.

ஏப்ரல் 25, 2016 அன்று தொடங்கப்பட்ட சவூதியின் விஷன் 2030 திட்டத்தின் எட்டாவது ஆண்டு நிறைவில், இத்திட்டத்தின் மூலம் பல்வேறு நிலைகளில் சவூதி அடைந்துள்ள மாபெரும் வளர்ச்சி சாதனைகளை எடுத்துரைக்கும் வகையிலான ஆண்டறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே இக்கூட்டம் நடைபெறுகிறது. எனவே பொருளாதார ரீதியாக இதுவரை சவூதி அடைந்துள்ள வளர்ச்சிகள், சாதனைகளை எடுத்துக் காட்டி வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இம்மன்றம் அமையும்.

இச்சந்திப்பானது முக்கிய மூன்று விடயங்களில் கவனம் செலுத்தவுள்ளது.

ௐ செழுமையை அடைவதன் மூலமும் சமூகங்களை மேம்படுத்துவதன் மூலமும் சர்வதேச ஒத்துழைப்பை ஏற்படுத்தல், விரிவான வளர்ச்சியை ஆதரித்தல் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் விரிவான வளர்ச்சியை ஆதரிக்க தேவையான திறன்களைக் கொண்ட வலுவான நிறுவனங்களை உருவாக்குதல், அடிப்படை பிரச்சினைகளில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அரசாங்கங்கள், தனியார் துறை மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையே உறுதியான தொடர்புகளை உருவாக்குதல். நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் பரவலை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களின் தரத்தில் அவற்றின் தாக்கத்தை மேம்படுத்தல், மனித மேம்பாட்டை நோக்காக கொண்ட சமூகத்தை உருவாக்குதல் மற்றும் சர்வதேச நிறுவனங்களில் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்.

– உள்நாட்டிலும், பிராந்திய அளவிலும், உலக அளவிலும் பல்வேறு நிலைகளில் செழுமையான வளர்ச்சியை அடைவதற்காக முதலீடுகள் வழிநடத்தப்படுவதை உறுதி செய்வதல், பொருளாதார மீட்சியைத் தூண்டுவதற்கும், நீண்ட கால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வலையமைப்புகளைப் பல்வகைப்படுத்துதல், சர்வதேச சமூகங்களின் வளர்ச்சி மற்றும் தேவைகளுக்கு ஏற்ப எதிர்கால தொழிலாளர் சந்தைகள் மற்றும் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் நிலையான பொருளாதார மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் புகை, கார்பன் உமிழ்வினை குறைத்தல், மற்றும் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான விரிவான மற்றும் நிலையான வழிகாட்டல்களை வழங்குதல்.

ௐ பாதுகாப்பான மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைய உலகளாவிய வளங்களுக்கு இடையே சிறந்த சமநிலையை பேணல், எரிசக்தி பயன்பாட்டின் செயல்திறனை இரட்டிப்பாக்குதல் மற்றும் சர்வதேச பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காக முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்தல், எரிசக்தி துறையில் ஒரு விரிவான நடைமுறை மாற்றத்தை நோக்கி முன்னேறல், மற்றும் பெற்றோலிய, எரிசக்தி துறைகளில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கூட்டு முதலீடுகளை ஆதரித்தல்.

இச் சிறப்புக் கூட்டத்தோடு சேர்த்து, சவூதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன், சுற்றுச்சூழல் ரீதியான சவால்கள் சமூகத்தில் கலைகளின் பங்கு, நவீன காலத்தில் தொழில்முனைவு மற்றும் டிஜிட்டல் நாணயங்கள். செயற்கை நுண்ணறிவு, ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் மனநலம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சிந்தனையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே உரையாடலை எளிதாக்கும் நோக்கத்துடன் ஒரு திறந்த மன்றத்தை நடத்துகிறது. மாணவர்கள், தொழில்முனைவோர், இளம் தொழில் வல்லுநர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாட இது ஒரு சந்தர்பமாக அமையும் என இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி தெரிவித்தார்.

# Apax Campus இன் மாபெரும் பட்டமளிப்பு விழா - 2024




Apax Campus இன் பட்டமளிப்பு விழா இன்று 29ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணி அளவில் நிறுவனத்தின் ஸ்தாபகர் மீரா சாஹிப் ஜெஸ்லின் ரிசாட் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா கலந்து கொள்கிறார். மாலைதீவு, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, எகிப்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், உள்நாட்டு அமைச்சர்கள், பேராசிரியர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் கல்வித் துறை உயர் அதிகாரிகள், என பல்வேறு உயிர்மட்ட சிறப்பு விருந்தினர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வின் போது கல்வி, முகாமைத்துவம், கலை, விஞ்ஞானம் போன்ற துறைகளில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பட்டமளித்து கௌரவிக்கப்பட உள்ளனர்.

யியஒ ஊயஅிரள நிறுவனமானது 2012 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனமானது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணவு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு பல்வேறு கற்கைநெறிகளை தொலைதூர கற்கை மூலம் வெற்றிகரமான முறையில் நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் IIC University of Technology ,Azteca University மற்றும் Gideon Robert University போன்ற பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சான்றிதழ் கற்கைநெறி முதல் கலாநிதி கற்கைநெறி வரையிலான பல்வேறு துறை சார் கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது. மேலும் இந்நிறுவனமானது அர்ப்பணிப்பு உள்ளதும், தகைமையும் அனுபவமும் உள்ள சிறந்ததொரு விரிவுரையாளர் குழுவொன்றினை கொண்டுள்ளதுடன், சிறப்பான முகாமைத்துவக் கட்டமைப்பினையும் கொண்டிருப்பதனால் நாடு முழுவதும் உள்ள மாணவர்களை ஈர்த்துள்ளது.

Apax Campus நிறுவனத்தின் கற்கைநெறிகளுக்கான கட்டணமானது நியாயமானதும், இலகு தவணை அடிப்படையிலான கட்டண முறையையும் கொண்டுள்ளமையினால் அதிகமான மாணவர்கள் இணைந்து பல்வேறு பாடநெறிகளைப் பயில்வதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையும் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருந்து கூட கற்கை நெறிகளை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்புகளை பெற்றுள்ளமையானது இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும்.

மேலும் இலங்கையில் அரச தொழில்துறைகளில் சேவையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் யியஒ Campus ஊடாக பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து, அத்தகைமை மூலம் பதவி உயர்வை பெற்றுள்ளமையும் முக்கிய அம்சமாகும். Apax Campus கல்வி நிறுவனம் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல்வேறு துறை சார்ந்த கற்கைநெறிகளை நடத்துவதினால் இன்றைய தொழிற்சந்தைக்குத் தேவையான திறன்களையுடைய தொழிலாளர்களை உருவாக்கியுள்ளமை மற்றும் ஒரு சிறப்பம்சமாகும்.

Apax Campus இன் நவீன கற்பித்தல் ஒழுங்கு முறைகள், துறைசார் கட்க்கைநெறிகளின் அறிமுகம், நெகிழ்வான தவணைக் கட்டண முறை, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் என்பவற்றால் சர்வதேச ரீதியாகவும் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கச்செய்துள்ளது.

Apax Campus இன் பிராந்திய நிறுவனங்கள் விரைவில் வெளிநாடுகளிலும் ஸ்தாபிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், காலத்துக்குத் தேவையான தொழிற்திறன்களை கொண்ட தொழிலாளர்களை உருவாக்குவதற்கான பல்வேறு பாடநெறிகளையும் அறிமுகம் செய்ய உள்ளது. மேலும் இந்த நிறுவனமானது கல்வித் துறையுடன் மட்டும் நின்று விடாது பல்வேறு சமூக அபிவிருத்தி பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவூதி தூதுவர் அமீர் அஜ்வதுக்கு மீடியா போரம் வழங்கிய கௌரவம்





(சமீஹா சபீர், அஷ்ரப் ஏ சமத்)

சவூதி அரேபியாவிற்கான இலங்கையின் புதிய தூதுவராக பதவியேற்கவுள்ள சட்டத்தரணி அஷ் ஷெய்க். அமீர் அஜ்வாட்யை கௌரவிக்கும் நிகழ்வு ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கொழும்பு 03 இலுள்ள "இந்தியன் சமர் டிரெஸ்டோரண்டில்" அண்மையில் (25) இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான என். எம். அமீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் போரத்தின் செயற்குழு உறுப்பினர்களான ஊடகவியலாளர்கள், ஒலி, ஒளிபரப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

மேலும், இந் நிகழ்வில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், குறிப்பாக ஊடகம் மற்றும் கலாச்சரம் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இருநாட்டு தொடர்புகளை விஸ்தரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர் காலத்தில் ஊடக செயற்பாட்டாளர்களுக்கான பல்வேறு நலன் திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் தூ துவரிடம் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன், போரத்தின் செயற்குழு உறுப்பினர்களால் குறித்துக் காட்டப்பட்ட சில சமூக நலன்திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இது விடயங்கள் அத்தனையும் உள்வாங்கிய புதிய தூதுவர் பட்டம் பெற்ற இவர்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணி மற்றும் சட்ட முதுமாணிப் பட்டங்கள் பெற்று 1997ல் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இலங்கை வெளிவிகார சேவையைப் பெற்று பல்வேறு நாடுகளில் இராஜதந்திரச் சேவைகளில் இணைந்து கொண்டார்.

தற்போது இலங்கை வெளிவிவகார அமைச்சில் மேலதிகச் செயலாளராக விளங்கும் மூ.டு அமீர் அஜ்வத் ஏற்கனவே ஓமான் மற்றும் யெமன் நாடுகளிலும் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றியுள்ளதோடு அடுத்த மாதம் முற்பகுதியில் சவுதி அரேபியா தூதுவராகப் பொறுப்பேற்கக் காத்திருக்கிறமை குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் தன்னால் எமது நாட்டுக்கு ஆற்றவுள்ள பல்வேறு நலன் சார்ந்த விடயங்கள் குறித்து விளக்கிக் கூறியமை சிறப்பம்சமாகும்.

புதிய தூதுவர் எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியளவில் சவூதி அரேபியாவிற்கான இலங்கையின் புதிய தூ துவராக பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜாமியா நளீமியா, பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில்

# பாக்கிஸ்தான் நாட்டின் தேசிய தின வைபவத்தின் வரவேற்பு வைபவம்













பாக்கிஸ்தான் நாட்டின் தேசிய தின வைபவத்தின் வரவேற்பு வைபவம் 25 ஆம் திகதி பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநட்டு மண்டபத்தில் புதிய உயர் ஸ்தாணிகர் பாஹீம் உல் அசீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்து கொண்டார். அத்துடன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,சபாநாயகர் லக்ஸ்மன் யாபா அபேவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பிணர்கள், முப்படைகளின் தளபதிகள், இலங்கையில் உள்ள தூதுவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

(அஸ்ரப் ஏ சமட்)

# Amazon Campus கல்வி நிறுவனத்துக்கு மேலும் இரண்டு UK அங்கீகாரங்கள்




இலங்கையில் தரமான முறையில் பல பாடநெறிகளை வழங்குகின்ற UGC மற்றும் TVEC இல் பதியப்பட்ட நிறுவனமான Amazon College & Campus இற்கு இரண்டு ருமு அங்கீகாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

முதலாவது டீசவைளா computer society எனப்படும் UK Chartered Body. இது IT துறையில் கால் பதிக்க நினைக்கும் மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான பாடநெறியாகும், இரண்டாவது OTHM (UK ) எனப்படும் மிகவும் பிரபலமான சர்வதேச அங்கீகாரமான மற்றுமொரு அங்கீகாரமாகும். இதில் பின்வரும் பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன IT, Business Managements, Education and Training Management, Health and Social Care Management, Tourism and Hospitality Management, Teaching and Learning, Project Management, Strategic Management and Leadership போன்ற துறைகளில் பயில விரும்பும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த களமாக அமையும்.

இந்த இரண்டு அமைப்புகளும் சர்வதேச ரீதியில் அங்கீகாரமானவைகளாகும். இந்த பாடநெறிகளை சில மாதங்கள் இலங்கையில் பயின்ற பின்னர் தொடர்ந்து வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு சென்று இரண்டாம், மூன்றாம் வருடங்களுக்கு நேரடியாக இணையக்கூடிய வாய்ப்பு மாணவர்களுக்கு காணப்படுகின்றது.

இதில் பல புலமைப்பரிசில்களும் வெகுவிரைவில் வழங்கப்பட உள்ளன என்று Amazon உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் அறிவித்தார்.

மேலதிக தகவல்களுக்கு +94724 999 907 | +94765 204 605 | +94741 969 918

# உமா ஓயா அலுவலகத்தில் ளுஹர் தொழுத ஜனாதிபதி ரைஸி

ஒரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த புதனன்று இலங்கை வந்த ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸி பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கைக்கு வந்தார்.

சற்றுத் தாமதமாகவே அவர் வருகை தந்தார். நேரடியாக மத்தளை விமான நிலையத்திற்கு வருகை தந்து உமா ஓயா திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

உமா ஓயா திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த போது சற்று அவர் தாமதமாக வருகை தந்துள்ளார்.

உடனடியாக லுஹர் தொழுகை நேரம் நெருங்கியதும் உமா ஓயாத் திட்டத்தின் செயற்பாட்டு அலுவலகத்திலே ஈரான் ஜனாதிபதி லுஹர் தொழுகையை நடத்தியிருக்கின்றார்.

தொழுகை விடயத்தில் ஜனாதிபதி ரைஸி தொழுகையைப் பேனுவதில் கடுமையாக இருந்தார். இப்ராஹிம் ரைஸி கொள்ளுப்பட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் கூட்டம் முடிந்ததும் மஹ்ரிப் தொழுகையை அவருடைய சகாக்களுக்கும் இமாமாக நின்று தொழுகை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கொல்லந்தலுவ தாருல் உலூமில் பரிசளிப்பு நிகழ்வு!



கொல்லந்தலுவ தக்கியா பள்ளிவாசலில் இயங்கி வரும் அல் மத்ரஸதுல் தாருல் உலூம் குர்ஆன் மத்ரஸா மாணவர்கள் ரமழான் மாதத்தை சங்கைப்படுத்தும் முகமாக 11 வயதின் கீழ் உள்ள மாணவர்கள் 29 நாட்களில் அல்குர்ஆனை ஓதி முடித்திருக்கிறார்கள். அம்மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசளிப்பு நிகழ்வும் நடை பெற்றது.

1) பாத்திமா ஹிமா. 03 குர்ஆண், 2) பாத்திமா ஹலீமா. 01 குர்ஆன், 3) முஹம்மத் அர்கம். 01 குர்ஆன்

4) முஹம்மத் அமான் 01குர்ஆன்

(தகவல்- குர் ஆன் மத்ரஸா முஅல்லிம் ஏ எம் எம் இப்ராஸ் (அஜ்வாதி))

# களுத்துறை மாவட்ட சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்திற்கான இலவச கருத்தரங்கு

(பீ எம் முக்தார்)

எதிர் வரும் 2024.05.06ம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முகங்கொடுக்கவுள்ள சிங்கள மொழி மூலமான பாடசாலைகளில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்காக களுத்துறை மாவட்ட ஜனாசா சேவைகள் சங்கத்தின் பூரண அனுசரணையில் சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்திற்கான இலவச கருத்தரங்கு இலவசமாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.15 வரை பேறுவலை பிரதேச செயலாளர் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எனவே சிங்கள மொழியில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் கலந்து பயன் பெறுமாறு களுத்துறை மாவட்ட ஜனாசா சேவைகள் சங்கம் வேண்டிக்கொள்கின்றார்கள்.

# ஈரான் அதிபர் இலங்கை விஜயம்

# வரலாற்று சிறப்பான பல்வேறு மாற்றங்கள் நிகழ வழி வகுக்கும்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

இலங்கைக்கு இந்த நெருக்கடியான தருணத்தில் ஈரான் அதிபரின் வருகை மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. இலங்கை குட்டி தேசமாக இருப்பினும் இலங்கையின் அபிவிருத்தி பணிகளுக்கு ஈரான் கொடுத்து வரும் முன்னுரிமை மற்றும் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து பல்வேறு கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாத ஒன்று என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை.

ஈரான் அதிபர் இபுராஹிம் ரைசி இலங்கை அதிபர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை சர்வதேச தொழில் நுட்ப அறிவு மட்டும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த திட்டம் பெறும் பங்கு ஆற்றும் என்பதே நாங்கள் இங்கே தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

மகாவலி திட்டத்திற்கு அடுத்தபடியாக இலங்கையின் பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இடம்பெறும் “உமா திய ஜனனி” பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இலங்கை - ஈரான் ஜனாதிபதிகளினால் மக்கள் பயன் பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஈரானின் ஆதரவின்றி இலங்கையால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவிற்கு நீரை கொண்டு சென்றிருக்க முடியாது. அதற்காக ஈரான் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும், ஈரானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்வதே நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். நிச்சயமாக இது பொருளாதார ஸ்திரத்தன்மை மேம்படுத்த இலங்கையின் வளர்ச்சியில் இது ஒரு மைல் கல்லாக இருக்கும் என்பதே உண்மையாகும்.

இதனைத் தொடர்ந்து பேசிய ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இந்த திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் மட்டுமல்ல, தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான அடையாளமாகும் என்றும் தெரிவித்தார். குறிப்பாக ஈரான் மிகவும் கடுமையான பதட்டத்தை சந்தித்து வருகிற நிலையில் கூட மிகவும் சக்தி வாய்ந்த அதிபர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்தது மிகவும் கவனிக்க கூடிய ஒன்றாக விளங்குகிறது.

மேலும் அவரது உரையில் இலங்கையுடன் மிக சிறந்த ஒத்துழைப்புடன் எல்லா நிலைகளிலும் முன்னோக்கிச் எடுத்து செல்லும் வகையில் தமது நாடு தயாராக இருக்கும் என்று உறுதியளித்த ஈரான் ஜனாதிபதி, இலங்கையின் மிக முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில் நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயாரெனவும் தெரிவித்தார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் (ருமுஆனீ) என்பது இலங்கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். தென்கிழக்கு பகுதியின் நிலவும் நீர்ப் பற்றாக்குறையைப் தனிப்பதற்காக, சுற்றுச் சூழலுக்கும், நீர் மூலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், உமா ஓயாவில் வருடாந்தம் சேரும் 145 (ஆஊஆ) கனமீற்றர் நீருக்கு மேலதிகமான நீரை கிரிந்தி ஓயவிற்கு திருப்பிவிடுவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன் மூலம் மொனராகலை மாவட்டத்தில் 4500 ஹெக்டயர் புதிய விவசாய நிலங்களுக்கும் தற்போதுள்ள 1500 ஹெக்டயர் விவசாய நிலங்களுக்கும் நீர்ப் பாசன வசதி கிடைக்கும். அத்தோடு பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை பிரதேசங்களின் குடிநீர் மற்றும் தொழிற்சாலை நீர் தேவைகளுக்கு 39 மில்லியன் கன மீற்றர் (ஆஊஆ)நீரையும் வழங்க முடியும். இதனால் வருடாந்தம் 290 ஜிகாவாட் (290 புறுர) மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு வழங்க முடியும். எந்த ஒரு தேசமும் அதன் வளர்ச்சி குறிப்பாக விவசாயம் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் மின்சாரம் உற்பத்தி அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் கண்டிப்பாக வேண்டும்..

இந்த திட்டத்திற்கு 514 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதியான ஒப்பந்தத்தின் ஊடாக 2010 மார்ச் 15 ந் தேதி முதல் நடைமுறைக்கு வந்த இத்திட்டத்திற்கு ஈரானின் ஏற்றுமதி மேம்பாட்டு வங்கி (ருனுடீஐ) 2013 வரை 50 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியிருந்தது. அந்த சமயம் ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்ட சர்வதேச தடைகள் காரணமாக அவர்களால் இத்திட்டத்திற்கு தொடர்ந்தும் நிதியளிக்க முடியாமல் போனது. எனவே, அரசாங்க நிதியைப் பயன்படுத்தி, ஒப்பந்தக்காரரான பராப் நிறுவனத்துடன், திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் மேலும் பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது, இலங்கை தேசிய நூலகம், ஈரான் தேசிய நூலகம் மற்றும் ஆவணக்காப்பகம் ஆகியவற்றுக்கு இடையில் ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் ஈரானின் கலாசார இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சுக்கு இடையே திரைப்படத் துறையின் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

ஊடகம் மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கான ஒப்பந்தங்களும் இருநாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்டது. குறிப்பாக ஈரான் நாட்டின் அதிபர் இபுராஹிம் ரைசி பேசுகையில் இலங்கை மற்றும் ஈரான் இடையிலான அரசியல், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கலாசார தொடர்புகளை விரிவுபடுத்துவதில் எந்தவித வரம்புகளும் கட்டுப்பாடுகளும் இல்லையென தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சி ஊடாக உரையாற்றிய இலங்கை அதிபர் ஈரானின் தொழில்நுட்ப வல்லமை அனைத்து துறைகளிலும் பரவியுள்ளது. ஈரான் தனக்கே உரிய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பேணும் நாடு என்பதையும் கூற வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் தனது உரையில் இரு நாடுகளின் பொதுவான அம்சங்களை நாம் வலுப்படுத்த வேண்டும் என்று இலங்கை அதிபர் தெரிவித்தார். மேலும் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் நாம் அனைவரும் உலகளாவிய தெற்கு நாடுகளில் அடங்குகிறோம். உலகளாவிய தெற்கு நாடுகள் தங்கள் அடையாளத்தையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இத்தகைய திட்டங்கள் மிகவும் முக்கியமானவை என்று தெளிவாக கோடிட்டுக் காட்டினார்.



இதற்கு பதில் அளித்த ஈரான் அதிபர் இபுராஹிம் ரைசி இந்த திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் என்றே கூறினார். . இந்த அற்புதமான பல் நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை இன்று அதிகார பூர்வமாக தொடங்கி வைக்கிறோம் என்று கூறிய இபுராஹிம் ரைசி, இலங்கை மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கும் ஆசிய பிராந்திய நாடுகளுக்கும் இடையே அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை உறுதி செய்வதே இங்கு மிக முக்கியமான விடயம் என்று நான் நம்புகிறேன்.

மேலும் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதை விட நமது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள மக்களின் விருப்பமும் உறுதியும் முக்கியமானது என்று கூற வேண்டும் என்று அவர் கூறினார்.

ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசியுடன் இடம்பெற்ற அதிகார பூர்வ பேச்சுவார்த்தையின் பின்னர் இரு நாட்டு ஜனாதிபதிகள் தலைமையில் இடம்பெற்ற கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போது இலங்கை அதிபர் தனது கருத்தை தெளிவுபடுத்தியது குறிப்பிடத்தக்கது.

இராஜதந்திரம் மற்றும் கலந்துரையாடல் மூலம் பிராந்தியத்தில் மட்டுமன்றி உலகில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் சுபீட்சத்தை உருவாக்க இலங்கையும் ஈரானும் இணைந்து செயற்படுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஈரானிய ஜனாதிபதி ரைசியின் இலங்கை விஜயம் இருதரப்பிற்கும் நன்மை பயக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இரண்டு நாடுகளும் மிகவும் சிறப்பான வர்த்தக கூட்டாளிகளாக மாறி மாறி வருது இலங்கை ராஜதந்திர நடவடிக்கை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இதன் மூலம் பல்வேறு ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் உள்ளன என்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்தார். குறிப்பாக இலங்கை மற்றும் ஈரான் வர்த்தகம் மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.கடந்த ஆண்டு வரையில் ஆன காலகட்டத்தில் இலங்கை ஈரானுக்கு ஆண்டுக்கு 85 மில்லியன் டாலர் அளவுக்கு தரமான தேயிலை ஏற்றுமதி செய்து வருகிறது. தேங்காய், நட்ஸ், முந்திரி ஏற்றுமதி சராசரியாக 3.5 மில்லியன் அமெரிக்க டாலர்கள், தேங்காய் நார் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதியாக 2.8 மில்லியன் அமெரிக்கா டாலர் என்கிற அளவில் மிகப் சிறப்பான ஏற்றுமதி செய்யும் நிலையில் இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை மேம்படுத்த ஈரான் உடனான நட்பை நிச்சயமாக பலப்படுத்தும் வகையில் தான் இந்த உறவுகள் அமைந்துள்ளது என்பதை நாம் கண்டிப்பாக அவதானிக்க கூடியதாக இருக்கிறது.
அதே நேரத்தில் கடந்த 25 ஆண்டுகளில் இலங்கையில் இருந்து ஈரானுக்கு அனுப்பப்பட்ட உற்பத்தி விவசாய பொருட்கள் அளவைக் கொண்டு நாம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

1997 ம் ஆண்டு வரையில் ஆன காலகட்டத்தில் இலங்கை ஈரானுக்கு ஆண்டுக்கு 13.7 மில்லியன் டாலர் அளவுக்கு மட்டுமே பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிலையில் தற்போது அதாவது 2022 காலகட்டத்தில் அது பன்மடங்கு அதிகரித்து 86 மில்லியன் அமெரிக்க டாலர்கள் என்கிற அளவில் மிகவும் கடுமையாக உயர்ந்துள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்..

அதேநேரத்தில் இந்தாண்டு 2024 காலகட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதம் வரையில் ஆன காலகட்டத்தில் 20 மில்லியன் அமெரிக்க டாலர்கள் தொகை அளவுக்கு தேயிலை இறக்குமதி செய்துள்ள நிலையில் இலங்கைக்கு ஈரான் கடனாகப் 251 மில்லியன் அமெரிக்க டாலர்கள் தொகை அளவுக்கு கச்சா எண்ணெய் வழங்கி இலங்கை பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய அளவில் பங்குகளிப்பு செய்து உள்ளதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலகட்டம் என்பது 2021 ம் ஆண்டு முதலாக அதாவது இலங்கை தேயிலை ஏற்றுமதி மாற்றாக ஈரான் மிக அதிக அளவில் இலங்கைக்கு கச்சா எண்ணெய் சகாய விலையில் சப்ளை செய்ய வேண்டும் என்பதே அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்தானது என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

வாஷிங்டனால் விதிக்கப்பட்ட தெஹ்ரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை எண்ணெய்க்கான தேயிலை ஒப்பந்தம் மீறவில்லை என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில், தேநீர் ஒரு உணவுப் பொருளாக இருந்ததால், அது அமெரிக்கா விதித்துள்ள கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் சர்வதேச நாடுகள் ஈரான் அணு ஆயுத யூரேனிய செறிவூட்டப்பட்ட சமபவத்திற்கு பிறகான தடை காரணமாக அதன் பொருளாதாரம் மிகவும் கடுமையாக பாதிப்படைந்த நிலையில் இலங்கை தேயிலை ஏற்றுமதிகான தடை இந்த பட்டியலில் வரவில்லை என்பது ஒரு நல்ல செய்தியாக உள்ளது. தடுப்பு பட்டியல் உள்ள எந்தவொரு வங்கியும் இலங்கை மற்றும் ஈரான் வியாபாரம் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. மிக முக்கியமாக இலங்கை தரமான தேயிலை என்பது பிரித்தானிய அரசின் ஆட்சி காலத்தில் இருந்தே ஈரான் நாட்டின் மிக முக்கியமான அடையாளம் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.ஸஅதாவது 2016 கால கட்ட வரைக்கும் ஈரான் 50 தசம் இலங்கை டீ யை பயன்படுத்தி வந்தது அறிந்த கொள்ள வேண்டும்

1967ஆம் ஆண்டு நிலவிய எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு அண்மித்த இரண்டு நாடுகளை அமைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்த முன்மொழிவுக்கு இணங்க, பாலஸ்தீனப் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் பரந்துபட்ட அரசியல் தீர்வை ஆதரிப்பதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேநேரத்தில் பாலஸ்தீன விவகாரம் தொடர்பில் பேசிய ஜனாதிபதி, இலங்கையும் ஈரானும் பலஸ்தீன மக்களுக்கான அரசை கட்டியெழுப்ப சட்டபூர்வமான மற்றும் பறிக்க முடியாத உரிமையை அங்கீகரிப்பதாக தெரிவித்தார். இலங்கை அதிபர் பேச்சு மிகுந்த அக்கறை மற்றும் சர்வதேச மனித உரிமைகளில் அந்நாட்டின் அக்கறையை நிலைப்படுத்தும் வகையில் அமைந்ததாக கருத்துக்கள் எழுந்துள்ளது.இதன் மூலம் வரும் காலங்களில் அரசு நாடுகளில் இலங்கை நம்பிக்கை மற்றும் வர்த்தக கூட்டாளிகளாக இடம் பெறும் என்பதை மையப்படுத்தி தான் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

அதேநேரத்தில் இலங்கைக்கு இந்த நெருக்கடியான தருணத்தில் ஈரான் அதிபரின் வருகை மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. குறிப்பாக சர்வதேச போர் பதட்டம் நிலவுகிற இந்த தருணத்தில் இலங்கை அரசாங்கம் அளவுக்கதிகமாக ஈரானுடன் ஆதரவுக்கரத்தினை நீண்டுவது இஸ்ரேலுக்கு எதிர்மறையான மனோநிலையை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இலங்கை கடந்த காலங்களில் தொழிலாளர்கள் பலர் வேலை நிமித்தமாக இஸ்ரேலிய நாட்டின் உதவியை பெற்றதை காண கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற இறுதிப் போரில் இஸ்ரேலிய ராணுவம் இலங்கைக்கு நேரடியாக உதவி புரிந்து கடந்த கால நிகழ்ச்சிகளுக்கும் இடையே தான் இலங்கை ஈரான் அரசுடன் நெருக்கம் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.



இலங்கை அரசாங்கம், ஈரானுடன் கிட்டிய உறவுகளைப் பேணுவதன் ஊடாக எரிபொருட்கள் உள்ளிட்ட விடயங்களில் நெருக்கடியற்றதொரு சூழலை ஏற்படுத்தலாம் என்றொரு இராஜதந்திரக் கணக்கினை போடலாம்.

ஆனால், இஸ்ரேல், ஈரான் போர்ப்பதற்றம் அதிகரித்துள்ள ஓரிரு நாட்களிலேயே கச்சா எண்ணெயின் விலைகள் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டன. அந்த அதிகரிப்பு நிச்சயமாக இலங்கையிலும் தாக்கத்தைச் செலுத்தாது இருக்கப்போவதில்லை. அந்தத் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு ஈரானுடனான நெருக்கமான உறவுகள் கைகொடுக்கும் என்று இலங்கை நம்பி இருக்கவும் வாய்ப்பு உள்ளது.

இந்த நேரத்தில் இலங்கை அணிசேராக் கொள்கையை பின்பற்றுவதாக தன்னை அடையாளப்படுத்தி வருகின்றபோதும், கடந்த காலங்களில் சீன சார்பு நிலையால், அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பூகோளப் போட்டித்தளமாக தன்னை மாற்றிக்கொண்டதாக நம்பப்படுகிறது . கடந்த ராஜபக்ஷ ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு குளறுபடிகளுக்கு தற்போது ரணில் விக்கிரமசிங்க அரசு ஒரு மாறுபட்ட நிலையை முன்னெடுத்துச் செல்ல ஒரு படித்தரமாக இருக்கலாம்.

இலங்கை பொருளாதார வளர்ச்சிக்கு ஈரான் உதவும் நோக்கில் இந்த பயணம் அமையும் என்பதை தாண்டி சர்வதேச அரசியல் சர்ச்சை எழுந்துள்ளது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. 1994 அர்ஜென்டினா நாட்டில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 85 க்கு மேற்பட்ட இஸ்ரேலியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதன் மூலமாக இருப்பதாக சந்தேக வளையத்தில் இருந்தது வரும் அஹ்மத் வாஹித் இந்த பயணத்தின் ஊடாக அவரை கைது செய்து தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அர்ஜென்டினா இலங்கை மற்றும் பாகிஸ்தான் தேசங்களுக்கு ஒரு விண்ணப்பமாக பதிவு செய்து இருந்ததை நாம் இந்த நிலையில் குறிப்பிட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு ஈரான் அதிபர் விஜயம் என்பது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய தேசங்களை ஏதோவொரு விதத்தில் பதட்டம் அடையச் செய்ய கூடியதாக இருக்கும். இந்த விவகாரத்தில் இந்தியாவை பொறுத்தவரை ஈரான் உடனான நட்பு பல தசாப்தங்களாக தொடர்ந்து வரும் நிலையில் இந்திய பத்ரிகைகள் இது குறித்து அதிருப்தி தரும் எந்தவொரு செய்தியையும் வெளியிடவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இநியாவை பொருத்தவரை இலங்கை மிக நட்புறவை கொண்ட தேசமாகவே பார்க்கப்படும் நிலையில் பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகள் உடனான கூட்டணி அமைக்கும் போது மிகுந்த பதட்டம் ஏற்படும் என்பதில் அதே அரசியல் கருத்துக்கள் பொதிந்து உள்ளது.

இந்நிலையில் தற்போது ஈரானுடன் நேசக்கரம் நீட்டி இஸ்ரேலின் அதிருப்தி நிச்சயமாக இலங்கையை நோக்கி இருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இஸ்ரேலின் அதிருப்தி என்பது அமெரிக்கா உட்பட மேற்குல நாடுகளின் அதிருப்தியை இணைத்தே தான் இருக்கும் என்பதே உண்மையாகும். இலங்கை போன்ற சிறிய தேசங்கள் அரபு நாடுகள் இடம் மிகுந்த நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலை எப்போதும் உள்ளது. இது நிச்சயமாக நசிந்து போன இலங்கை பொருளாதார வளர்ச்சிக்கு இது எல்லா வகையிலும் உதவிகரமாக இருக்கும் என்பதே சர்வதேச அவதானிகள் கருத்தாக இருக்கிறது.

# ஈரானிய ஜனாதிபதியிடம் இருந்து படிப்பினை பெற வேண்டிய இலங்கை அரசியல்வாதிகள்



எம்.எஸ். அமீர் ஹுசைன்



இலங்கையில் 2011 ஆம் ஆண்டு ஈரான் இஸ்லாமிய குடியரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு அபிவிருத்தி திட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட உமா ஓயா பல நோக்கு அபிவிருத்தி திட்டத்தை ஈரான் ஜனாதிபதி இப்ராஹீம் ரய்சி 2024.04.24 ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஒப்படைத்தார். இலங்கை ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் அழைப்பின் பேரில் ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்து இத்திடங்களை ஆரம்பித்து வைத்தார். இத்திட்டத்திற்கு "உமா திய ஜனணி" பல்நோக்கு திட்டம் என்று பெயரிடப் பட்டிருக்கின்றது. இத்திட்டத்திற்கு ஈரான் அரசாங்கம் சுமார் 14000 கோடி ரூபாய்களை (40 கோடி அமெரிக்க டாலர்கள்) செலவிட்டிருக்கின்றது. ஏற்கனவே இலங்கையில் இவ்வாறான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு சீனா, ஜப்பான், இந்தியாக, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கி திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் இவ்வாறான உதவி திட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தாக அமைகின்றது.

ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் பாகிஸ்தானுக்கும் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அங்கும் பலதரப்பு பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்ப பரிமாற்ற திட்டங்கள் தொடர்பான உடன்படிக்கைகளில் கையொப்பம் இட்டு அந்த விஜயத்தை பூர்த்தி செய்த பின்னரே இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். 24 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் ஜனாதிபதி உமா ஒயா திட்டத்தை திறந்து வைத்த பின்னர் கொழும்புக்கு விஜயம் செய்து ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவை சந்தித்து இருதரப்பு உறவுகள் பற்றிய கலந்துரையாடல் மற்றும் 05 புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கையொப்பம் இட்ட பின்னர் அதே தினம் இரவே மீண்டும் வந்த வழியாக ஈரான் திரும்பி உள்ளார். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் 2008 ஆம் ஆண்டு அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நஜாட் இலங்கைக்கு விஜயம் செய்து இந்த திதட்டத்திற்கான ஆரம்ப கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கைகளில் கையொப்பம் இட்டிருந்தாா். ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி ஊடாக இத்திட்டத்திற்கான உதவிகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

ஏற்கனவே சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட பல அரபு நாடுகள் இலங்கையின் நிலையை அறிந்து பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்ட உதவிகளையும் வழங்கி வந்துள்ள நிலையில் மஹாவலி அபிவிருத்தி ததிட்டத்தின் பின்னர் இவ்வாறான பாரிய திட்டம் ஒன்றை ஆரம்பிக்க ஈரான் உதவிக்கரம் நீட்டி இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். உமா ஓயா நீர் மின் பிறப்பாக்கி (உமா திய ஜனணி) பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் மூலம் 120 மெகா வோட் மின்சார உற்பத்தி இலங்கையின் மின்சார செயற்பாட்டு திட்டத்திற்கு புதிதாக இணைக் கப்படுகின்றது. அதே போன்று பதுளை, பண்டாரவலை மற்றும் மொனராகலை பிரதேசங்களின் குடி நீர் பிரச்சினைக்கு தீர்வு காணல், இப்பிரதேசங்களில் நீர்பாசன வதிகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் மேலதிகமாக 4500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் இயலுமையை அதிகரித்தல் என்பன இத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுவதால் பல்நோக்கு அபிவிருத்தி திட்டமாக கருதப்படு கின்றது.

பராளுமன்றத்தில் 2024.04.24 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பான மூன்று நாள் சபை ஒத்திவைப்பு நேர விவாதம் நடைபெற்ற நிலையில் 2019 ஏப்ரில் மாதம் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலின் பின்னர் இந்நாட்டில் திட்டமிடப்பட்ட அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த பௌத்த தீவிரவாதிகள் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் தீவிர வாத நாடுகள், இஸ்லாமிய பயங்கரவாத நாடுகள், அவை இலங்கையில் பௌத்தத்தை அழிப்பதற்காக திரைமறைவில் இருந்து உள்நாட்டில் இருக்கின்ற அமைப்புக்களுக்கு நிதி உதவிகளை வழங்குகின்றன என்று அபாண்டமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சிங்கள மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக திசை திருப்பி இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை தூ ண்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலும் முக்கியமான ஒரு இஸ்லாமிய நாடு என்ற வகையில் இலங்கையின் மின்சார பிரச்சினை, குடி நீர் பிரச்சினை, பாசன வசதிகளை அதிகரித்து விவசாய அபிவிருத்தி ஊடாக உணவு உற்பத்தி என்று உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2019 உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதலின் பின்னர் அரபு நாடுகளின் எண்ணெய், எரிபொருள் இலங்கைக்கு வேண்டாம் என்று வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்தி சிங்கள மக்களை தவறான வழிக்கு இட்டுச் சென்றவர் அதுரலியே ரத்ன தேரர். அதே போன்று அரபு நாடுகள் குறித்த கடுமையான எதிர்ப்பை நாடளாவிய ரீதியில் பரப்பியவர் கலபொட அத்தே ஞானசார தேரர் மற்றும் இத்தே கந்த சத்தா திஸ்ஸ தேரர் போன்வர்கள். ஆனால் இன்று அதே சிங்கள மக்களின் தேவைக்கு எந்தவிதமான இன, மத, மொழி வேறுபாடுகளும் இன்றி உதவிக் கரம் நீட்டி இருப்பது ஒரு முஸ்லிம் நாடு ஆகும்.

ஈரான் குறித்து இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்திடம் இஸ்லாமிய கொள்கை அடிப்படையிலான கருத்து வேறுபாடுகள் நிலவினாலும் இந்த சந்தர்ப்பத்தில் அது முக்கியமானதல்ல. சர்வதேச அரங்கில் மேற்குலகிற்கு சவாலாக சொந்தக் காலில் எழுந்து நிற்கும் ஒரு நாடு என்ற வகையில் ஈரானின் முன்னேற்றங்களையும் வளர்ச்சியையும் பாராட்ட வேண்டும்.

ஏற்கனவே 2009 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் சிவில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பல ஐரோப்பிய நாடுகள் வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்விடங்களை இழந்து நிர்க்கதிக்கு உள்ளாகி இருந்த மக்களுக்கான அடிப்படை வாழ்க்கை வசதிகளை அதிகரிக்க உதவி செய்து கொண்டிருந்தன. இலங்கையில் பயங்கரவாதத்திற்கு உதவி செய்வதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கத்தின் இராணுவத்திற்கு எதிராக உதவி செய்வதாக அப்போதைய சிங்கள தீவிரவாத அமைப்புக்கள் நெருக்கடிகளை கொடுத்ததால் பல நாடுகள் அவற்றின் திட்டங்களை கைவிட்டு அவர்களது நாட்டிற்கு திரும்பிச் சென்ற வரலாற்றையும் நாம் மறந்து விட முடியாது. அதே வரிசையில் தான் அரபு நாடுகள் குறித்தும் இலங்கையில் சிங்கள பௌத்த தீவிரவாத அவதானம் இருந்து வருகின்றது.

இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் 2024.04.25 ஆம் திகதி பாராளு மன்றத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு நேர விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அதுரலியே ரத்ன தேரரின் உரை அமைந்திருந்தது. அந்த விவாதத்தில் அவர் பேசுகையில் இந்த தாக்குதலின் பின்னணியில் கோதாபய ராஜபக்ஷவும் இல்லை, மைத்திரிபால சிரிசேனாவும் இல்லை. இலங்கையின் எந்தவொரு அரசியல்வாதியும் இல்லை. இந்த தாக்குதல்களின் பின்னணியில் தொடர்ந்து இருந்து வருவது அடிப்படைவாத, இஸ்லாமிய பயங்கரவாத அரபு நாடுகளும் இலங்கையில் இயங்கும் இஸ்லாமிய பயங்கரவாதிகளுமாவர் என்று குற்றம் சுமத்தி இந்நாட்டில் இந்த தாக்குதலின் பின்னணியில் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற சூத்திரதாரிகளுக்கு வெள்ளை சுண்ணாம்பு பூசினார். சூத்திரதாரிகள் என்று பேராயரால் கருதப்ப டுபவர்களை பாதுகாக்கும் வகையில் உரை நிகழ்த்தியமையை அவதா னிக்க முடிகின்றது.

அதுரலியே ரத்ன தேரர் மீண்டும் இலங்கையில் இஸ்லாமிய பயஙடகரவாதம் என்றும் அடிப்படைவாதம் என்றும் உயிர்த்த ஞாயிறு தாக்புகுதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கையின் முன்னுக்குப் பின் முரணாண பதிவுகளை மேற்கோள் காட்டி உரை நிகழ்த்தி அன்றைய ஆட்சியாளர்களை பாதுகாப்பதில் பெரும் முயற்சி எடுத்து வருவதை அவதானிக்க முடிந்தது. தொடர்ந்து பௌத்த சமூகத்தவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தக்கூடிய இஸ்லாமிய பயங்காரவாத பிசாசு நீற பூத்த நெருப்பாக இருந்துகொண்டிருப்பதை இந்த விவாதத்தில் அதுரலியேவின் உரை வெளிப்படுத்துவதாய் அமைகின்றது. இந்த பூதம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் எந்த நேரத்திலும் கிளம்பி வெளிப் படலாம். ஆனாலும் ஈரான் ஜனாதிபதி மிகவும் ஆலுவல் கூடிய ஒருவராக இருந்துகொண்டு இலங்கைக்கு விஜயம் செய்தமை, காலத்தையும் அரச பணத்தையும் வீனடித்து விரயம் செய்வதற்கு இடமளிக்காமல் வந்த அதே பயணத்தில் நேரடியாக ஊமாஓயா பகுதிக்கு சென்று திட்டத்தை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கொழும்பு சென்று நடக்க வேண்டிய வேலைகளை கவனித்தார். அன்றைய தினமே நாடு திரும்பினார். அத்துடன் ஈரான் மீது யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையிலும் நாட்டின் தலைவர் என்ற நிலையில் மிகவும் தைரியமாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதை பாராட்ட வேண்டும். அத்துடன் ஈரான் ஜனாதிபதியிடம் இருந்து இலங்கை அரசியல்வாதிகள் பல பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டி இருக்கின்றது. எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டின் இறைமை, தன்னாதிக்க இறையான்மையை விட்டுக் கொடுக்காமல் வந்த வழியிலும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு சவால் விடும் வகையில் பதிலடி கொடுக்க தவறவில்லை.

அத்துடன் பாகிஸ்தான் சென்ற ஈரான் ஜனாதிபதி அங்கு உரையாற்றும் போது ஈரான் மீது இஸ்ரோல் தாக்குதல் நடத்தி கைவைத்தால் உலக வரைபடத்தில் ஈஸ்ரேல் என்ற நாடு இருக்காது என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளார். இந்த பின்னணியில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கும் சேர்த்து பொருளாதார தடை விதிக்கப்படும் என்ற எச்சரிக்கையை விடுத்து இருக்கின்றது. ஏன் இவ்வாறு ஈரான் மீது அமெரிக்கா சீறிப் பாய வேண்டும். இஸ்ரேலை பாதுகாப்பதற்கு ஆகும். ஆனால் இஸ்ரேல் பாலஸ்தீன காசா மீது 200 ஆவது நாளாகவும் மிலேச்சத்தனமான முறையில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி அங்குள்ள மக்களை கொண்டு குவித்து வருகின்றது. இந்த தாக்குதல் 2024 ஒக்டோபர் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகும். இதுவரையில் இஸ்ரேலின் தாக்குதல் காரணமாக 33,900 அப்பாவி பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 10,000 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 6000 பேர் தாய்மர்களாவர். ஆதனால் 19,000 குழந்தைகள் அநாதரவாகி உள்ளனர் அத்துடன் 76,670 பேர் இந்த தாக்குதல் காரணமாக காயமடைந்துள்ளனர் என்று ஐ.நா. வின் மகளிர் நல அமைப்புக்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் சிரிய தலைநகர் டமஸ்கஸில் அமைந்துள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது. ஆனாலும் ஐக்கிய அமெரிக்கா பிரிட்டன் போன்ற மனித உரிமைகள் தொடர்பாக உலகின் உச்சத்தில் நின்று குரல் கொடுக்கும் நாடுகள் ஈஸ்ரேல் சர்வதேச அரங்கின் ஆதரவுடன் பாலஸ்தீன மக்களுக்கு இழைத்து வரும் எந்த அநீதியையும் கண்டிக்காமல் ஈரான் மீது பொருளாதார தடை விதிப்பது தொடர்பாக கடுமையான எச்சரிக்கை விடுத்து இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் ஈரானுடன் பொருளாதார உறவை கடைபிடிக்கும் நாடுகள் மீதும் தடை விதிப்பதாக அறிவித்திருப்பது உலக அரங்கில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.



# உளரையே உலுக்கிய மாணவனின் மரணம்

-நியாஸ் ஸாலி-

நேற்றைய 27.04.2024 பகல் பொழுது, மடுள்போவ - கெஹெல்பன்னல கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் குடா ஓயாவில் நண்பர்களுடன் நீராடச் சென்ற இளம் மாணவன் நீரில் மூழ்கி மரணமடைந்த செய்தி ஹெம்மாதகம பிரதேசத்தையே சோகத்தில் ஆழ்த்தியது.



அல் அஸ்ஹர் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் நிஷான் அஹமத் எனும் 16 வயது மாணவனே பரிதாபமாக உயிரிழந்தார். பள்ளிபோருவ பிரதேசத்தை சேர்ந்த நிஸார் (மாவனல்ல) நூர்ஜஹான் தம்பதியினரின் இளைய மகனான நிஷான் அஹமத் மூன்று பிள்ளைகள் கொண்ட குடும்பத்தின் இளையவராவார். கல்வி, ஆன்மீகம், தலைமைத்துவப் பண்பு என்று சிறந்து விளங்கினார். தன்னைவிட சிறியவர்கள் மீது இரக்கமும், மூத்தோர்களின் மீது கண்ணியமும் கொண்டவர். ஒழுக்க விழுமியங்களை பேணி வாழ்வினை துவங்கிய, இவ்விளம் மாணவனின் திறமைகளை கண்ட கல்லூரி, மாணவத் தலைவனாக தேர்ந்தெடுத்திருந்தது. தனது கடமைகளை செவ்வனே செய்து ஆசிரியர் குலாத்தினதும் மாணவர்களினதும் பேரன்பை பெற்றிருந்தமை அவரது மரண வீட்டில் கண்டு கொள்ள முடிந்தது.

தான் பிறந்து வாழ்ந்த ஹெம்மாதகம நகரோடு இணைந்த பகுதியை சேர்ந்த மக்களிடமும், இச்சிறு வயது முதலே நற்பெயரை பெற்றிருந்தார். எப்போதும் புன்னகையுடன் காணப்படுவார். சிறுவர்களுக்கேயுரிய குறும்புகள் செய்தாலும் அடுத்தவர் மனம் புண்படாத, அடுத்தவருக்கு தொல்லையற்றதாகவே இருக்கும். வழமையாகவே அதிகாலை தொழுகையை தவறாது பேணியவர். ரமழான் காலங்களின் அவர் வயதை ஒத்தவர்கள் பள்ளிவாசலுக்கு வெளியிலும் விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர் தன் இரவு வணக்கத்தில் தன்னை அர்பணித்திருந்தார். ஆன்மீகம், கல்வி, விளையாட்டு, குறும்பு என அனைத்திலும் சிறந்து விளங்கினார். தினமும் அவரை அடிக்கடி காணும் வாய்ப்பு எனக்கிருந்தது. இனி எனதும் எமதூர் மக்களினதும் நினைவுகளில் என்றென்றும் வாழ்வார். இன்று ஞாயிறு மு.ப 8:30 மணிக்கு அவரது ஜனாஸா திரளான மக்களின் கண்ணீரோடும் பிரார்த்தனைகளுடனும், ஹெம்மாதகம பெரிய பள்ளிவாசலுக்கு எடுத்துச் சென்று, ஜனாஸா தொழுகையை தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டது. கிட்டிய ஆண்டுகளில் மிக அதிகளவு மக்கள் கலந்து கொண்ட ஒரு ஜனாஸா நல்லடக்க நிகழ்வு இது என்பதில் சந்தேகமில்லை.

குடா ஓயா என்பது நிஜத்திலும் சிறிய ஆறுதான். என்றாலும் கமத்தொழிலுக்காக நீர் பெறும் பொருட்டு 1945 ஆம் ஆண்டு குறித்த இடத்தில் சிறிய அணைக்கட்டு ஒன்று கட்டப்பட்டுள்ளது.

“அமுன“ என்றழைக்கப்படும் இந்த இடம் காலா காலமாக மிகவும் ஆழமான ஆபத்தான இடமாகும். அறிவித்தல் பதாகைகள் இடப்பட்டிருந்தாலும், விடுமுறை தினங்களில் மாணவர்கள், இளைஞர்கள் குறித்த இடத்தில் நீராட வருவது சாதாரண விடயமாகவே பார்க்கப்பட்டது. இதற்கு முன்பும் இங்கு சிலர் மூழ்கிய நிலையில் அயலில் வாழும் இளைஞர்களால் காப்பற்றப் பட்டுள்ளமையு தெரிய வருகின்றது. சேறும் சகதியுமாக காணப்படும் குறித்த இடத்தில் இனியும் இவ்வாறான சோகங்கள் நிகழாதிருக்க பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் ஆவன செய்வார்களா?

# QR Code மயமாகியிருக்கும் வாழ்க்கை!



– ஹரீஸ் ஸாலிஹ்–

காலம் வேகமாக பறக்கிறது.எம்மைச் சுற்றி இருந்த அனைத்தும் Manual, Automatic, Electrical, Electronic, Digital, Computerized, டீயசஉழனந, QR Code, Satellite , GPS, Automation என மாறி விட்டன. Bicycle ம் அதனது டுழஉம ம் கூட பல வகையான கூர்ப்புகளுக்கு உள்ளாகின. தற்போது “QR Code lock“ உச்ச கட்டத்தில் இருக்கிறது!

கற்பது, தொழில் செய்வது, மார்க்கட்டில் மரக்கறி வாங்குவது, தேங்காய் மாங்காய் வாங்குவது , இறைச்சி மீன் முட்டை வாங்குவது, Pizza order பண்ணுவது, ஹோட்டலில் தேநீர் குடித்துவிட்டு bill கட்டுவது, Telephone Electricity water bill கட்டுவது, License புதுப்பிப்பது, Birth Certificate, Marriage certificate, Death certificateபெற்றுக்கொள்வது, OL / AL சநளரடவள பெற்றுக்கொள்வது, மலசலம் கழிக்க செல்வது ஆகிய வாழ்க்கையின் அனைத்து தினசரி விடயங்களும் QR Code மயமாகி விட்டன. Smart Phone ம் Internet ம் இல்லையென்றால் மலசலம் கழிக்கக் கூட முடியாத நிலை!



அந்தக் காலத்தில் ஊர்களில் எல்லா வீடுகளிலும் Bicycle இருக்க வில்லை. ஆனால் எல்லா Bicycle களிலும் Lock இருக்கும் அல்லது Bicycle ஐ மரத்திலோ அல்லது தூணிலோ பாதுகாப்புக்காக கட்டி வைப்பதற்கு சங்கிலியும் பூட்டும் ஒவ்வொரு Bicycle உரிமையாளர்களிடம் கட்டாயம் இருக்கும்.

திருடர்களுக்கு மத்தியில் பைஸிக்கிள் திருடர்கள் என்று ஒரு உப குழு ஒன்று இருந்து கொண்டே இருந்தது. பைஸ ிக்கிள் லொக் மாறும் போதெல்லாம் அவர்களது தொழிலிலும் ருிபசயனந கள் மேற்கொள்ளப்பட்டு அவர்களது துழடி ஆயசமநவ ஐ maintain பண்ணிக் கொண்டு வந்தார்கள். ஆனால் இப்போது இந்த GPS-Satellite monitored QR Code lock உடன் சவால் பண்ண முடியாது. எங்கிருந்தாலும் காட்டிக் கொடுத்து விடும். எனவே இவர்கள் வேறு தொழில்களை நாட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவை.



இனி விடயதத்துக்கு வருவோம். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் ”பீளு-ளுயவநடடவைந” மூலம் அவதானிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் ”நுடநஉவசைஉயட ளுஉழழவநசள” பாவணைக்கு வந்து பல வருடங்கள் கடந்து விட்டன.

பொது இடங்களில் உள்ள ”Electrical Scooters” ஐ உபயோகிக்குய்ம் முறை ”

1-Mobile App I Download பண்ண வேண்டியது

2-Wallet I Top-up பண்ண வேண்டியது

3-QR Code I Scan பண்ண வேண்டியது (சாவி)

4-பயணத்தை ஆரம்பிப்பது

5-பயணத்தை முடிப்பது

இவை பொது இடங்களில் பாவணைக்காக வைக்கப்பட்டிருக்கும். Instructions எல்லாம் App இலேயே இருக்கும். குறிப்பிட்ட பிரதேசத்தை தாண்டும் போது செயல் இழக்கும். இறுதியில் பயணித்த தூ ரம், நேரம், அதற்கான தொகை அனைத்தும் Automation system மூலம் அறியக் கிடைக்கும். இவற்றை கண்காணிப்பதற்கு மனிதர்கள் யாரும் அங்கில்லை என்பது தான் இந்த Automation. அனைத்தும் Software மூலமே நிகழ்கின்றன! கள்வர்களுக்கு இவற்றை பார்க்க முடியும். தூக்கினால் உயளந பாரம். Satellite ம் Police ம் வீட்டுக்கே வந்திடும்.

QR Code, Camera, Satellite, Social Media கள்வர்களுக்கும். ஏமாற்றுக் காரர்களுக்கும் வேட்டு வைத்துக் கொண்டிருக்கிறது! இறைவனுக்கு பயமோ இல்லையோ, இவற்றுக்கு பயந்து களவு ,பொய், ஏமாற்று செய்ய முடியாத நிலையில் மனிதன் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

தொழிநுட்பம் மனிதனுக்கு சாதகமாக அமையட்டும்.

# தமிழ் சிங்கள புத்தாண்டு கலாசார உணவு விழா



(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

தமிழ் சிங்கள புத்தாண்டினை முன்னிட்டு 2024ம் ஆண்டு சிங்கள மொழி கற்கை நெறியினை பயிலும் உத்தியோகத்தர்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார உணவு விழா பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நேற்று (28) கலாச்சார மத்திய நிலையத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம கலந்து கொண்டார்.

மேலும் இங்கு கல்வி பயிலும் அரச உத்தியோகத்தர்களின் கலை கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றதோடு பாரம்பரிய உணவு வகைகளும் பரிமாறப்பட்டது.

மேலும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு பொண்ணாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் வருகை தந்த அதிதிகளுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மூவின மக்களின் ஒற்றுமையை வெளிக்கொணரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் தலைமை உரையினை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் நிகழ்த்தியதோடு, அசர கரும மொழிகள் திணைக்களத்தின் வளவாளர் ஏ.எச்.நாசிக் அகமடின் உரையைத் தொடர்ந்து அதிதி உரையினை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




அண்மையில் சீன அரசின் அழைப்பில் 12 நாள் சீன விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த இலங்கை உள்ளிட்ட உலகின் 30 நாடுகளில் இருந்தான பத்திரிகையாளர் குழுவில் இலங்கையின் முக்கிய ஆங்கிலப் பத்திரிகையான சிலோன் டுடே ஊடகவியலாளர் நாளிர் ஜேமால்தீனும் இடம்பெற்றிருந்தார்.

## மனநலமும் ஆலோசனையும் 28

# மக்களுடன் தொடர்பும் மன நலமும்

பகுதி - 2

உணவு உடை மற்றும் தங்குமிடத்திற்குப் பிறகு நமது மிகப்பெரிய மனித தேவை, மற்றவர்களுடன் நேர்மறையான வழியில் தொடர்பு கொள்வது அல்லது இணைந்து செயல்படுவதாகும். குடும்ப இணைப்பு, சமூக இணைப்பு, நண்பர்களுடனான இணைப்பு இப்படி இணைப்புகள் எப்படி இருந்தாலும் நாம் பிரிக்க முடியாத இணைப்பால் ஒன்றுபட்டு இருக்கிறோம்.

நாம் பிறந்தது முதல் நமது கடைசி நாள் வரை, கடைசி மூச்சு வரை ஒருவருக்கொருவர் சொந்தமாக இருக்க வேண்டும் என்ற ஆழமான ஏக்கம் எம் ஆன்மாவில் ஆழப் பதிந்துள்ளது. அது ஒரு உணர்வுரீதியான தேவையாகவும் உள்ளது. மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு உறவு பேணி அந்தத் தேவையை நாம் பூர்த்தி செய்யும் போது அது நமக்கு மனஅமைதியைத் தருகிறது. நம் இதயத்திற்கு ஆறுதலைத் அளிக்கிறது.

மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது நாம் வெளியிடும் ஆக்ஸிடாஸின் மற்றும் இயற்கை ஓபியாய்டுகள் நம் உடலில் அமைதியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் மற்றவர்களின் ஆதரவு நமக்கு இருக்கிறது என்ற உணர்வு நம் மனதை அமைதிப்படுத்த காரணமாகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

நாம் துன்பங்களைச் சந்திக்கும் போது, நமது உறவுகளும் சமூகமும் நமது பின்னடைவில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் இணைப்பு, அவர்கள் தரும் ஆறுதல் மற்றும் உதவிகள் எல்லாம் எமது மனதுக்கு அமைதியை தந்து நல்வாழ்வு வலுப்பெற மிகவும் துணையாக அமைகிறது என்றும் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

நாம் ஒவ்வொருவரும் ஒரு அழகான இணைப்பை, வலுவான ஆதரவு அமைப்பைக் கொண்டிருப்பதானது நாம் சந்திக்கும் சவால்களை எளிதாக சமாளிக்கவும், மனநல நிலையை இலகுவாக பராமரிக்கவும் பேருதவியாக இருக்கும்.

ஆரோக்கியமான, வலுவான மனித தொடர்பு உடல் ஆரோக்கியம் சார்ந்த அபாயங்களைக் குறைக்கவும் உடல் நலன் பேணவும் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்தி நீண்ட ஆயுளுக்கான வாய்ப்புகளை 50% ஆக அதிகரிக்கச் செய்வதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வாழ்க்கையின் மிகப்பெரிய பாடங்கள், வாய்ப்புகள் மற்றும் வெற்றிகள், வெகுமதிகள் மற்றவர்களுடனான எமது தொடர்புகளில் காணப்படுகின்றன.

மனித வாழ்வில் இணைப்பின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்போது, நமது ஒட்டுமொத்த நல்வாழ்வு மேம்படும் என்பதை இதிலிருந்து இலகுவாக புரியலாம்.

மனிதன் ஒரு சமூகப் பிறவி, அவன் ஒருபோதும் தனியாக வாழ முடியாது. தனியாக வாழவும் கூடாது. மனிதர்கள் பிறந்தது முதல், அவர்கள் இறக்கும் வரை சமூகத்தில் தான் வாழ்கிறார்கள். சிறிய வடிவத்தில் இருந்து தொடங்கும் வாழ்க்கை குடும்பம் எனும் நிறுவனத்தில் உள்ளாகி அவர்கள் வளர வளர அவர்களின் வட்டமும் பெரிதாகிறது. பெரிதாகி, விரிவாகி சமூகம் எனும் பரந்த நிறுவனத்தில் சங்கமிக்கிறது. இதுவே இணைந்து வாழும் வாழ்வு. இஸ்லாமிய சமூகவியலிலும் உளவியலிலும் உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு இதுவே காரணம்.

தனிமையைக் கடந்து, மிகவும் நிறைவான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்கான திறவுகோல், எங்களை சுற்றியுள்ளவர்களுடன் உண்மையான தொடர்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளைத் தேடுவதாகும்.

மகிழ்ச்சியான, ஆரோக்கியமான வாழ்க்கைக்காக எமது குடும்பத்தினர், பங்குதாரர், சகாக்கள், பணியாளர்களுடன் நமது உறவுகளை ஆழப்படுத்திக் கொள்வோம்.

பழைய நண்பர்களுடன் உறவை புதுப்பித்துக் கொள்வோம் தன்னார்வத் தொண்டு செய்வதில் ஆர்வம் காட்டுவோம்.

மறறவர்களுடன் ஒரு சிறப்புத் தொடர்பை ஏற்படுத்தி அவர்களுடன் உறவை வலுப்படுத்தி ஒருவரையொருவர் அன்பால் வளர்த்து சமூக ஆரோக்கியமும் மன அமைதியும் பெறுவோம்.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---






**நாச்சியாதீவு பர்வீன்**

# சுலைஹாவின் பண்ணாட்டு கவிதைகள்

**திருஞானசம்பந்தன் லலிதாகோபன்**

அனுராதபுரம் கெக்கிராவையில் இருக்கும் சுலைஹா அவர்கள் நீண்ட கால இலக்கிய போராளி. பல்வேறு பணிகளை செய்துகொண்டு தன்னடக்கத்தை அணியாக்கி கொண்டுள்ளவர்.ஜீவநதி வெளியீடாக வந்த அவரின் ”தற்கொலையின் திசைபால் பறத்தல்” என்ற கவிதைகளும் கட்டுரைகளும் அடங்கிய தொகுதியிலிருந்து சில துளிகள் உங்களுக்காக.

இருக்கும் கவிதைகளும் கதைகளும் நமக்கு போதும் ஏன் இந்த வேண்டாத வில்லங்கங்கள் என்போருக்கான எனது பதில் , கலையுணர்வு ததும்பும் மனிதமனம் என்பது அன்றாடம் பலவிதமான சுவைகளை வேண்டி நிற்பதுடன் நமது நிலம் தாண்டிய அனுபவங்கள் நமது அனுபவங்களை அவற்றுடன் ஒப்பிட்டு பார்க்கவும் விலத்தி பார்க்கவுமான வெளியை திறந்து விடுகிறது என்பதே.

1.A Bird came Down The Walk
**(மென்நடையில் வந்தது பறவை)**

எமிலி டிக்சன் அவர்களினால் யாக்கப்பட்ட கவிதை இது.பொதுவாகவே இந்த உலகின் பிரதான உயிர்களென இறுமாப்பு கொண்ட மனிதனை கணக்கேயெடுக்காது செல்லும் பறவை குறித்தான கவிதை இது.

ஃஃஃ

பக்கவாட்டில்
சுவரருகே
ஊர்ந்த
வண்டுக்கு
அன்பருளிற்று
நகர்ந்து போக
வழிவிட்டுஃஃஃ

சிற்றுயிர்களை பிடித்து விழுங்குதலே பறவையின் இயல்பாக இருக்க, இங்கே பறவையின் இயல்புமாற்றத்தை கொணர்கிறார் கவிஞர்.”அன்பருளுதல்” என்பது அழகிய வார்த்தையாக அமைகிறது. ஆனால் இங்கே வாசிப்பில் ஒரு சிக்கல் வருகிறது.

அன்பை வழங்குவதே வழமையாக, அருளுதல் எனும் நிலைக்கு பறவை உயர்த்தப்படுகையில் அது இறையாகிறது.சிலவேளைகளில் மூன்றாவது கண்ணாக இந்த காட்சியை விபரிக்கும் மனித கவிதை சொல்லியை விஞ்சுவதான வரிகளோ தெரியவில்லை.

அபாயத்தில் இருப்பவர்கட்கு
அருளும் கிருபையில் விஞ்சும்
கவனமுடன் வழங்கினேன் ரொட்டி
துண்டொனாறை...

கவிதையில் வந்த பறவைக்கு இரை என்பது தேவையற்ற ஒன்றாகவே கவிதை நகர்கையில்,வலிந்து ரொட்டியை வழங்கும் மனித மனத்தின் தேவை என்ன?ஏனெனில் ”அருளல்” குணத்தை தனதுடைமையாக்கும் மனிதனின் அதிகார மிகுதியே இது.ஆனால் பறவை மனிதனை கவனியாது பறந்து செல்கிறது.



இங்கே நிறைந்த அவதானிப்பும் தீராத கற்பனையும் கவிதையில் ஒருங்கிணைகின்றன.

2. Echo - **எதிரொலி**

கிறிஸ்டினா ரொசைட்டி அவர்கள் யாத்த கவிதை இது.மரித்த நேசத்தினை மீளவரச்சொல்லி நீள்கிறது கவிதை. இது அன்பு அல்லது நேசத்திற்கு மரணம் எல்லையல்ல என்ற தொன்மத்தின் மீளுருவாக்கமாகிறது.மரித்து போன காதலின் ஞாபகங்களின் அலைகளூாடு தொலைபேசி பரிமாற்றமாய் இந்த கவிதை இருக்கிறது.ஆனால் மரித்தது மீளாது என்ற யதார்த்தமும் கவிஞரிடம் உள்ளது. ஏனெனில் மரித்தோரும் ஜீவிப்போரும் கூடுமிடமாய் கனவே இருக்கிறது.

இன்னும் கனவுகளில் என்னிடம்
நீ வா மரணத்தில் உறைந்து நீ
இருந்தாலும் என்னை கவர்ந்த வரிகள் கீழ்வருபவை.இதனை விட காதலை எவ்வாறு மொழிபெயர்ப்பது.இந்த வரிகளில் தெரிவது தனிப்பட்ட நம் அந்தரங்கமன்றோ.

முன்னம் வெகுநாட்களுக்கு
முன்னம் மெல்ல சாய்ந்து
மெதுவாய் பேசியதே போலும் என்
நேசமே நீ என்னிடம் பேசு

3. Remember - **ஞாபகம் கொள்**

கிறிஸ்டினா ரொசைடியின் மற்றோர் கவிதை இது.ஞாபகம் கொள் என்ற கோரிக்கையின் பின் மறந்து விடலுக்கான பதற்றம் ஒன்று எப்போதும் இருக்கிறது. அதுவே இந்த கவிதையின் ஜீவனாகிறது.

என்னை ஆற்றுப்படுத்தவும்,
எனக்காய் பிரார்த்திக்கவும்
தாமதித்து விட்டதாய் நீ புரிந்து
கொள்வாய் ஆதலால், எனை நீ
ஞாபகம் கொள்.

ஆனால், இதே ஞாபகங்கள் மற்றவருக்கு காயம் செய்கையில் அதனை மறந்து விடுதலே ”விட்டு விடுதலை”.இந்த ”விட்டு விடுதலையை” இறுதியில் கவிதையில் வரும் தன்னிலையே வழங்கிவிடுகிறது இவ்வாறு.

முன்னம் ஒருபோது என் வசமிருந்த
ஞாபகங்களின் சுவடுகளாய் இருளும்
அழிவும் எஞ்சுமாயின் நல்லது எனை
மறந்து நீ புன்னகைத்திருப்பது.

**4. இரவு மழை** - Night rain

ஜே.பி.கிளார்க் என்ற கவிஞர் எழுதிய கவிதை இது.அடக்கப்பட்ட கறுப்பின மக்களின் குரலாக எழுந்த குரல்களில் இந்த கவிஞரும் இணைகிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களை பகிர்ந்து கொள்ளும் இந்த கவிதையில் அவர்களின் கோரிக்கை அமைதியான இரவாகிறது.ஆனால் மழையின் சப்தம் அவர்களை தூங்கவிடாது செய்கிறது. இங்கு மழையை ஒரு குறியீடாக வாசிப்பு செய்யலாம்.

இளகித்துவளும் பாய்போல
எவரும் படுத்திருக்கிறார்கள். இந்த வரிகளினூடே நமது கிராமங்களின் தொன்மம் தெரிகிறது. இரவில் படுத்துறங்கிய ஓலைப்பாயை விடியலில் கழுவிப்போடும் வழக்காறு அது.கவிதை இறுதியில் நம்பிக்கை தரும் வரிகளுடன் நிறைகிறது.

வெள்ளநீர் வழிந்தோடிப் போய்
கடலில் கலந்துவிடுமொரு பொழுதில்
ஆறுதலின் பெருங்கரத்தின்
தடவுதல் போல நிம்மதியாய்
நிச்சலனத்தில் இரவொன்று வரும்
நமையுறங்கச்செய்ய.

---

# சப்பாத்து பாடல்

காலில் போடும் சப்பாத்து -
தனித் தோலில் ஆன சப்பாத்து

பயணத்திற்கு குதவும்
சப்பாத்து - நம்
பாதம் காக்கும் சப்பாத்து

வகை வகையான சப்பாத்து
- பல வழிகள் அறியும் சப்பாத்து

தேர்ந்தே எடுக்கும் சப்பாத்து
- சிலர்
திருடிப் பிழைக்கும் சப்பாத்து

காலைக் கடிக்கும் சப்பாத்து
- சிலர் கழற்றி அடிக்கும் சப்பாத்து

பழுதாய்ப் போன சப்பாத்து
- சிலர் கழுவிக் குடிக்கும் சப்பாத்து!

**(என்னைத் தீயில் எறிந்தவள் தொகுதியிலிருத்து)**

**தமிழ்மாமணி**
**அஸ்ரப் சிஹாப்தீன்.**

# “தாக்குதலை இஸ்லாமிய தீவிரவாதிகளே முன்னெடுத்தனர்”

## கார்டினலுக்கு விஷேட அறிக்கை வழங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய

உயிர்த்த ஞாயிறு தொடர்பான கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்ட இரு தரப்புகள் குறித்த உண்மைகளை கர்தினால் மறைக்கின்றார் அல்லது வெளிப்படையாக தவிர்க்கின்றார் என குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை என்னிடம் கையளித்த மறுநாள் நான் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை தொடர்பு கொண்டேன் என அவர் தெரிவித்தார். ஆனால் நான் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நான் கர்தினாலை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவேயில்லை என கோட்டாபய தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தினர் எனக்கு வாக்களிக்கவில்லை, என்னை ஆதரிக்கவில்லை என்பதை நான் அறிவேன் .இதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தடைசெய்யப்பட வேண்டிய எந்த அமைப்பிலும் நான் ஏன் ஆதரவாளர்களை வைத்திருக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

2021 ம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்டது. நான் அதனை ஆராய்ந்த பின்னர் சட்டமா அதிபரிடம் பாரப்படுத்தினேன். 2021 பெப்ரவரி 23ம் திகதி அது நாடாளுமன்ற சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. மார்ச் முதலாம் திகதி அதன் பிரதிகள் பௌத்த கர்தினால் மற்றும் கத்தோலிக்க ஆயர்களிற்கு கையளிக்கப்பட்டது எனத்தெரிவித்த அவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பித்ததும் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நான் ஆறுபேர் கொண்ட அமைச்சரவை உபகுழுவை நியமித்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையின் கீழ் சி.ஐ.டியின் அப்போதைய இயக்குநர் 2019 நவம்பர் மாதம் பொலிஸ் ஆணைக்குழுவால் பதவிமாற்றம் செய்யப்பட்டார். இந்த பொலிஸ் ஆணைக்குழு 19வது திருத்தத்தின் கீழ் முன்னைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டது என தெரிவித்துள்ள கோட்டாபய ராஜபக்ச உயர்நீதிமன்ற வழக்கு தொடர்பில் நீதிபதிகளை செல்வாக்கிற்கு உட்படுத்துவது தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்கவுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடல்கள் கசிந்தமை தொடர்பிலான விசாரணைகள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழு



இந்த சி.ஐ.டி அதிகாரியை சில வாரங்களின் பின்னர் பணியிலிருந்து இடைநிறுத்தியது. சில மாதங்களின் பின்னர் முன்னாள் பொலிஸ் அதிகாரியொருவருக்கு எதிரான குற்றவியல் சம்பவம் தொடர்பில் பொய்யான ஆதாரங்களை உருவாக்கியமை தொடர்பிலான விசாரையின் பின்னர் இந்த சி.ஐ.டி அதிகாரி நீதிமன்றகாவலில் வைக்கப்பட்டார் என தெரிவித்துள்ள கோட்டாபய ராஜபக்ச உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை சீர்குலைப்பதற்காக இந்த அதிகாரியை நானே பதவி நீக்கம் செய்தேன் என தெரிவிக்கப்படுவதை மறுத்துள்ளார்.

இந்த குறிப்பிட்ட சி.ஐ.டி அதிகாரி 2017 இல் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று பல மாதங்களின் பின்னரும் தொடர்ந்து பதவியிலிருந்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு முந்தைய காலப்பகுதியில் வவுணதீவு விவகாரம் தொடர்பில் சி.ஐ.டியினரே விசாரணைகளை மேற்கொண்டனர். மாவனெல்லயில் புத்தர் சிலைகள் சேதமாக்கப்பட்டமை, வனாவில்லில் வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பிலும் சி.ஐ.டியினரே விசாரணைகளை மேற்கொண்டனர் எனவும் குறிப்பிட்டார்.


சட்ட அமுலாக்கல் தரப்பினர் மேலும் எச்சரிக்கையுடன் இருந்திருந்தால் உயிர்த்த ஞாயிறுதாக்குதலிற்கு முன்னரே சஹ்ரான் குழுவினரை கைது செய்திருக்கலாம். இந்த தாக்குதலை தடுக்க தவறியது சி.ஐ.டியின் இயக்குநரின் தவறே என குற்றம் சுமத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்தவில்லை என கர்தினால் தனது உரையில் குற்றம் சாட்டியுள்ளார். எனினும் குற்றவாளிகளை அரசியல்வாதிகளால் நீதியின் முன் நிறுத்த முடியாது பொலிஸாரினாலேயே அதனை செய்ய முடியும் என குறிப்பிட்டு, சட்டமா அதிபர் திணைக்களமும் நீதிகட்டமைப்பும் இணைந்து இதனை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோட்டபாய ராஜபக்சே தெரிவித்துள்ளார்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இஸ்லாமிய தீவிரவாதிகளே முன்னெடுத்தனர். புலனாய்வு விசாரணைகளில் மிக முக்கிய அமைப்பான சி.ஐ.டி இந்த தாக்குதலிற்கு பல மாதங்கள் முன்னராகவே தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் மற்றும் அமைப்பு குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னர் அவர்களை கண்டுபிடிக்க தவறிவிட்டது எனவும் கோட்டபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.




பயாஸா பாஸில்



# உங்கள் வாழ்வை வெற்றிகொள்ள வேண்டுமா?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள்.. அன்றாட வாழ்க்கையில் தினமும் ஒரு மணி நேரமாவது உங்கள் உடலுக்கென ஒதுக்கி உடற்பயிற்சி, நடைப்பயிற்சி போன்று உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கக்கூடிய செயலில் ஈடுபடுங்கள். அவை உங்கள் உடலை சீராய் வைப்பதோடு மட்டுமல்லாமல் மனதையும் புத்துணர்ச்சியாய் வைக்க உதவும்.

நம் அன்றாட வாழ்க்கையில் சிறு சிறு மாற்றங்களை நாம் ஏற்படுத்தினால் அது நம்மை வெற்றிக்கான பாதைக்கு அழைத்து செல்லும். உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற....

உடற்பயிற்சி செய்ய தவறாதீர்கள்: வேலை, குடும்பம் என்று பம்பரமாய் சுற்றிசுழலும் இந்த பரபரப்பான உலகில் தனக்கான மீ டைம் என்பதையே நம்மில் பலர் முற்றிலுமாக மறந்தே விட்டோம். உடல் ஆரோக்கியமும் அதில் அடங்கும்.. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள்.. அன்றாட வாழ்க்கையில் தினமும் ஒரு மணி நேரமாவது உங்கள் உடலுக்கென ஒதுக்கி உடற்பயிற்சி, நடைப்பயிற்சி போன்று உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கக்கூடிய செயலில் ஈடுபடுங்கள். அவை உங்கள் உடலை சீராய் வைப்பதோடு மட்டுமல்லாமல் மனதையும் புத்துணர்ச்சியாய் வைக்க உதவும்.

வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்: ”ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள், அவனே எனது வழிகாட்டி!” என்றார் ஜுலியஸ் சீசர். உலகில் தலை சிறந்த தலைவர்கள் அத்தனை பேரும் புத்தகம் வாசிக்கும் பழக்கம் உடையவர்களாய் இருந்தார்கள். புத்தக வாசிப்பிற்கு அப்படி ஒரு பவர் என்றே கூறலாம். ஒவ்வொரு புத்தாகவாசிப்பின் முடிவிலும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான ஒரு ஊன்று கோல் நிச்சயம் நமக்கு கிடைக்கும். அன்றாட வாழ்க்கையில் புத்தக வாசிப்புக்கென நேரத்தை ஒதுக்குங்கள்.

பயனுள்ள பொழுதுபோக்கில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள்:

உங்கள் மனதிற்கும், மூளைக்கும் ஓய்வும் புத்துணர்ச்சியும் மிகவும் அவசியம். ஒரு பயனுள்ள பொழுதுபோக்கில் உங்களை அன்றாட ஈடுபடுத்திக்கொள்ளுங்கள் . பெயின்டிங் செய்வது, வரைவது, போன்ற செயல்களில் ஈடுபடுவதால் உங்களுக்கு ஒரு விதமான புத்துணர்ச்சி கிடைக்கும்.

எதிர்மறை எண்ணங்களை தவித்திடுங்கள்: ”எண்ணம் போல் வாழ்க்கை” என்பார்கள். நமது வாழ்க்கையின் நகர்வுகளுக்கும் நமது எண்ணத்திற்கும் பல வகையில் தொடர்புகள் உண்டு என பல ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பதை நம்மில் பலர் கேட்டிருப்போம். நமது சிந்தனைகள், எண்ணங்கள் பல வகையில் நமது வாழ்க்கையுடன் தொடர்புடையது. எனவே நமது எண்ணங்கள் எப்போதும் பாசிட்டிவாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்கள் வரும்போது அதை நாம் கடந்து வர வேண்டும். நமது எண்ணங்கள் நமக்கு நன்மை பயக்கும் வகையில் இருக்க வேண்டும்.

நல்ல நண்பர்களோடு பழகுங்கள்: நம்மை சுற்றி எப்போது பாசிட்டிவான நபர்களை வைத்துக்கொள்வதே சிறந்ததது. நம் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகவும், நமது வளர்ச்சியை கண்டு மனமார மகிழும் நல்ல நணபர்கள் இருந்தால் வாழ்க்கையில் பல தடைகளை சுலபமாக கடந்து விடலாம். அதனால் தான் நாம் யாருடன் பழகுகிறோம் , நாம் யாரை நெருக்கத்தில் வைக்கிறோம் என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இவற்றை பின்பற்றி வாழ்க்கையில் வெற்றி பெற முயற்சிப்போம்..!!!

# உங்கள் வாழ்க்கையை நீங்கள் நேசித்ததுண்டா?



இன்றைய நாள், இந்த நிமிடம் உங்கள் வாழ்க்கை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

உங்களுக்கு கிடைத்த எண்ணற்ற அருள்களை சற்று நினைத்துப் பாருங்கள்..

உங்கள் வாழ்க்கை எந்தளவு அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று உணர்வீர்கள்...!!

மனப்பூர்வமாய் உங்கள் வாழ்க்கையை வாழுங்கள். நீங்கள் எதிர்பார்த்தவைகள் உங்களுக்கு கிடைக்காமல் போயிருக்கலாம்... ஆனால், அதை விடவும் சிறப்பானவொன்றை உங்கள் வாழ்க்கை பெற்றிருக்கும்.. யார்யாரையோ காதலிக்கும் நீங்கள், உங்களை... உங்கள் வாழ்க்கையை காதலித்ததுண்டா...???

உணர்ந்து , காதலித்து , அருமையாக உங்கள் வாழ்க்கையை வாழ்ந்து பாருங்கள். உங்களை விட பாக்கியசாலி யாருமில்லை.. உங்களை வென்றிடவும் யாருமில்லை.

வாழ்க்கை இனிக்க ஆரம்பிக்கும்.. இந்த நாள் இனிய நாளாக மாறட்டும்..!!



அரபாத் பஹுர்தீன்




# வெண்கலம் வென்று வரலாறு படைத்தது இலங்கை அஞ்சலோட்ட அணி

21ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளின் 20 வயதுக்குற்பட்ட 4400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தது அசத்தியது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 21ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பின் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் அஞ்சலோட்டப் போட்டிகள் இடம்பெற்றன. இதில் 4,400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி பங்கேற்றிருந்தது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் மிகச் சிறந்த ஆரம்பத்தினை பெற்றுக் கொண்டனர். இதனால் ஏனைய நாட்டு அணிகளுக்கு அணிக்கு பலத்த சவாலைக் கொடுத்த இலங்கை அணி போட்டித் தூரத்தை 3 நிமிடங்கள், 28.18 செக்கன்களில் நிறைவு செய்து மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை தனதாக்கியதுன் ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளில் 4,400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டிகளில் முதல் பதக்கத்தை வெற்றி கொண்டு அசத்தியது.

இந்த நிலையில், வெண்கலப் பதக்கம் வென்ற இலங்கை அணியில் காலி மஹிந்த கல்லூரியின் ஜத்ய கிருளு, வத்தளை லைசியம் சர்வதேசப் பாடசாலையின் ஜித்மா விஜேதுங்க, குருநாகல் மலியதேவ கல்லூரியின் தேமிந்த ராஜபக்ஷ மற்றும் மாத்தறை மத்திய கல்லூரியின் நுஹன்சா கொடித்துவக்கு ஆகியோர் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் போட்டியில் 3 நிமிடங்கள் மற்றும் 14.70செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்த சீனா முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், 3 நிமிடங்கள் மற்றும் 15.71 செக்கன்களில் போட்டித் தூரத்தை கடந்த இந்தியா அணி வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மீண்டும் ரி20 தொடருக்காக இலங்கை வந்தது உகண்டா அணி

உகண்டா கிரிக்கெட் அணி இலங்கைக்கு வந்தடைந்து 6 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்கேற்கவுள்ளதுடன், அதன் முதல் போட்டியில் இன்று இலங்கை ஏ அணியுடன் காலி மைதானத்தில் பலப்பரீட்சை நடாத்தவுள்ளது.

9ஆவது உலகக்கிண்ணத் தொடர் எதிர்வரும் ஜ/ன் மாதம் 1ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்க நாடுகளில் இடம்பெறவுள்ளது. இதில் முதல் முறையாகப் பங்கேற்கவுள்ள உகண்டா அணி தமது உலகக்கிண்ணத் தொடருக்கான பயிற்சி ஆட்டத்திற்காக கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்து இலங்கை அபிவிருத்தி கிரிக்கெட் அணியுடன் 7 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றிருந்தது. இதில் 7:0 என தோல்வியும் அடைந்திருந்தது.

இந்நிலையில் இன்றைய தினம் இலங்கை வருகின்ற உகண்டா கிரிக்கெட் அணி 6 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்கேற்கவுள்ளது. இதில் முதல் 3 போட்டிகளில் இலங்கை ஏ அணியுடன் காலி சர்வதேச மைதானத்தில் விளையாடவுள்ளது. இன்றை தினம் முதல் போட்டியும். இம்மாதம் 30 மற்றும் எதிர்வரும் 3ஆம் திகதி 2ஆவது மற்றும் 3ஆவது போட்டிகளும். இடம்பெறவுள்ளது. பின்னர் மே மாதம் 5 மற்றும் 7ஆம் திகதி இடம்பெறவுள்ள 4ஆவது மற்றும் 5 ஆவது போட்டியில் இலங்கை இராணுவ அணியை எதிர்த்து பொனாஹொட மைதானத்தில் விளையாடவுள்ளது.

மேலும் 6 ஆவதும் இறுதியுமான போட்டியில் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி இலங்கை பொலிஸ் அணியை கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச மைதானத்தில் எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உகண்டா அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளரான முன்னால் இந்திய அணியின் வீரரான அபய் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# தேசிய கெரம் சம்பியனானார் சஹீட் ஹில்மி



54ஆவது தேசிய கெரம் சம்பியன்ஷிப்பில் போட்டித் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் அனாஸ் அஹமடை தோல்வியடையச் செய்த சஹீட் ஹில்மி நடப்பாண்டின் சம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

இலங்கை கெரம் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 54ஆவது சம்மேளனக் கிண்ண கெரம் சம்பியன்ஷிப் போட்டித் தொடரின் இறுதிக் கட்டப் போட்டிகள் கொஹுவலையில் அமைந்துள்ள இலங்கை கெரம் சம்மேளன தலைமையகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் சஹீட் ஹில்மி அனாஸ் அஹமட்டை எதிர்த்து விளையாடினார். மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் தனது சிறப்பாட்டத்தை வெளிப்பட்டுத்திய சஹீட் ஹில்மி அனாஸ் அஹமடை வீழ்த்தி நடப்பாண்டின் சம்பியனாகத் தெரிவானார்.

இதேவேளை பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நுவன்திகா சன்ஜீவனி, ரஷிகா ரசான்ஜலியை இறுதிப் போட்டியில் எதிர்கொண்டு தனது அனுபவமிக்க ஆட்டத்தினால் மிக இலகுவாக வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்று அசத்தினார்.

# பேருவளை உலமாக்களுக்கான கிரிக்கெட் சுற்றுத்தொடர் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட ஸலாஹ் அணி

பேருவளை பிராந்திய உலமாக்களுக்கான உத்வேகமான கிரிக்கெட் சுற்றுத்தொடரானது, ரியல் சுப்பர் கிங்ஸ் அணியின் ஏற்பாட்டில் தர்கா நகர் ஸ ாஹிரா கல்லூரி மைதானத்தில் நேற்று (27) மிக விருவிருப்பாக நடைபெற்று முடிந்தது.

இதில் செம்பியன் கிண்ணத்தை ஸலாஹ் அணியினர் சுவீகரித்துக் கொண்டதுடன், சம்பியன் கிண்ணமானது பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் பொறியியலாளர் ஹஸீப் மரிக்கார் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

(பீ.எம். முக்தார்)



இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.